# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-9 • Volume-9 • இதழ்-6 • Issue-6 • ஏப்ரல்-2024 • April -2024 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com




## கொடைக்கானல் சுற்றுலாவா?

## மோசடி கும்பல் ஜாக்கிரதை

பராமரிப்பற்ற அரசு கட்டிடங்களை காவல்துறையினருக்கு தங்கும் விடுதிகளாக மாற்ற கோரிக்கை



வாக்கு விலையாகாமல் விழிப்புணர்வுடன் வாக்களிப்பது தலையாயக் கடமை

## குழந்தைகளே +2 க்கு பிறகு என்ன செய்ய போறீங்க?

மத்திய பல்கலை. பற்றிய தகவல்கள் உள்ளே...

சின்ன வெங்காயத்தின் அரிய பலன்கள்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

ஏப்ரல் மாதத்தில் கிரக பெயர்ச்சிகள்


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
Our Grocery
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


7 Star
Sports Academy
ROLLER
SKATING


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
Aeroskato Ball Association
Tamilnadu
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

ஏப்ரல் 2024 மலர் 9 இதழ் 6

**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.**M.பாலகிருஷ்ணன் சுவாமி**

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., K.சந்திரசேகரன் M.A., M.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், V.S.முத்துபாண்டியன், P.பாலசுப்பிரமணி, N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், G.D.கமல், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், S.R.காமராஜ், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, R.மணிகண்டன், A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், V.வினோத்குமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, R.நடராஜன், S.பிரசாத், U.தியாகராஜன், T.V.செல்வகுமார், S.சரவணன், R.சுதர்சன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், K.கண்ணன், M.மணிவண்ணன், V.சுப்பிரமணியன், V.அஜய்சர்மா, G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், I.ஜெய்மனோகர், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், ராஜராஜேந்திரன், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, N.ரத்தினம், C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், M.வெங்கடேஷ், S.நவீன், S.கமலகண்ணன், M.ராஜகோபால், S.அந்தோணியோ ஹரி, T.ஆலன்பே, P.அந்தோணி ஜேம்ஸ், B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், N.பரமசிவம், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், G.லெட்சுமணன், Y.ராயிஸ் அஹமது, R.கண்ணன், S.மணி, K.மகேஷ், V.பழனிசாமி, A.முகமதுயூனுஸ், K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், S.அசோக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், L.பிரஃபுல்ஜெயின், V.சண்முகராஜ், K.மகேந்திரன், D.சிவக்குமார், M.மகேஸ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, N.ஷண்முகமூர்த்தி, A.குமரன், P.சதீஷ், Y.முபாரக், V.சுபாஷ், MS.அப்துல்மஜீத், M.தினேஷ்பாபு, S.பூர்ணசந்திரன், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, G.ஸ்ரீதரன், K.லக்ஷ்மண குமார், M.மஹேஷ்சங்கேந்தி, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், J.தினேஷ்சிங், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.அப்பாச்சி மணி, S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், M.பர்குணன், S.மோகன், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், T.திலீபன் குமார், G.V.ஜெகதீசன், A.மீனாட்சி சுந்தரம், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், R.சஞ்சய் அமர்நாத், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்னான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE




# வாக்கு விலையாகாமல் விழிப்புணர்வுடன் வாக்களிப்பது தலையாயக் கடமை

ஒரு விரலை உயர்த்துவோம், அதன் பெருமையை உணர்த்துவோம்!! வருகின்ற 2024, ஏப்ரல் 19, பாராளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் 100% வாக்களிக்க தேர்தல் ஆணையம் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நிகழ்த்தி செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பல அரசியல் கட்சிகள் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு, கூட்டணிகள் அமைத்து தேர்தல் களத்தில் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

குறிப்பாக, புதிய வாக்காளர்கள் சிந்தித்து வாக்களிப்பது தலையாயக் கடமையாகும். பொதுநல பாங்கோடு மக்களுக்கு சேவை செய்யும் வேட்பாளர்களை கட்சி பாகுபாடு இன்றி தேர்ந்தெடுக்க வாக்காளராகிய நாம் 100% வாக்களிக்க முன்வர வேண்டும்.

வாக்குகளை விலைக்கு விற்பது நம்மை விற்று அடிமைகளாக வாழ்வதற்கு சமம். ஆகையால், இந்த தேர்தலில் வாக்கை விலை கொடுத்து வாங்க நினைக்கும் வேட்பாளர்களை புறக்கணித்து 100% எந்த எதிர்பார்ப்பும் இன்றி மக்கள் சேவை பணியாற்றும் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் நாடும் நாட்டு மக்களும் நலம் பெறுவார்கள்.

வாக்குச்சாவடி அமைந்துள்ள இடம் மற்றும் எவ்வாறு வாக்களிக்கிறோம் என்பன அடங்கிய அனைத்து சந்தேகங்களும் தெளிவுபடுத்த மாவட்ட தேர்தல் தகவல் கட்டுப்பாட்டு அறை இலவச தொடர்பு எண் மற்றும் வாக்களிப்பதின் அவசியம் குறித்து சந்தேகங்களை கேட்டறிய மாவட்ட தேர்தல் அலுவலக மையங்களில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தவறாமல் 100% வாக்களித்து தங்களது உரிமையை நிலைநாட்ட வேண்டும். தவறாமல் வாக்களிப்போம், தேசத்தின் நலனில் அக்கறை கொள்வோம்.

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

# திருச்சி மாநகரில் காவல்துறை சார்பாக பொதுமக்கள் மனு விசாரணை முகாம்

## மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள் தலைமையேற்றார்

மக்களுடன் முதல்வர் முகாம், காவல்துறை இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் ஆணையர் ஆகியோர்களிடம் கொடுத்த புகார் மனுக்களின் மீது தீர்வு கண்டறியும் வகையில் பொதுமக்கள் சிறப்பு குறைதீர்ப்பு முகாம் நடைபெற்றது.

திருச்சி மாநகரத்தின் காவல் ஆணையர் திருமதி.N.காமினி, IPS., அவர்கள், பொதுமக்களின் குறைதீர்க்கும் வகையில் ஒவ்வொரு புதன்கிழமையும் பொதுமக்களிடமிருந்து நேரடியாக மனுக்களை பெற்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

அதன்படி, (27.03.2024)-ந் தேதி திருச்சி மாநகரம், கே.கே.நகர் ஆயுதப்படை திருமண மண்டபத்தில் பொதுமக்கள் சிறப்பு குறைதீர்ப்பு முகாம் காவல் ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொதுமக்கள் இச்சிறப்பு முகாமிற்கு நேரில் வந்து கொடுத்த 18 மனுக்கள் பெறப்பட்டு உரிய அதிகாரிகளுக்கு தீர்வுக்கான அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட ‘மக்களுடன் முதல்வர்’ முகாம், முதலமைச்சரின் தனிப்பிரிவு, காவல்துறை தலைமை இயக்குநரிடம் நேரடியாகவும், தபால், ஆன்லைன் மூலமாகவும் பொதுமக்கள் அளித்த 540 மனுக்கள் பெறப்பட்டு, 434 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, மீதம் உள்ள 106 மனுக்கள் சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களின் மூலம் விசாரணை நடத்தி விரைவில் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருச்சி மாநகர காவல் ஆணையர் அவர்களிடம் அளித்த 470 மனுக்களில் 200 மனுக்கள் மீது துரிதமாக தீர்வு காணப்பட்டது. மீதம் உள்ள மனுக்கள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. இம்முகாமில், காவல் துணை ஆணையர்கள் தெற்கு மற்றும் வடக்கு, காவல் சரக உதவி ஆணையர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டார்கள்.

தலைமை நிருபர்: மு.பாண்டியராஜன், திருச்சி



## லிங்க முத்திரை




இரு கை விரல்களையும் படத்தில் காட்டியபடி கோர்த்துக் கொள்ளவும். வலது பெருவிரலை நீட்டிக் கொள்ளவும். வலது பெருவிரலை இடது பெருவிரல் மற்றும் சுட்டு விரல்களால் சுற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். இதேபோல, இடது பெருவிரலை நீட்டியபடியும் செய்யலாம். மார்புக்கு நேராகக் கைகளைப் பிடித்துக்கொண்டு இந்த முத்திரையை செய்யவுபம். சுவாசத்தை நன்றாக உள்ளிழுத்து வெளிவிடவும். இந்த முத்திரை உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. நுரையீரலிளுள்ள உறைந்த சளியை இளக்கி வெளியேற்றுகிறது. ஆஸ்துமா, சளி, மார்பு சம்பந்தமானண நோய்கள் அகலச் சிறந்த முத்திரையாகும். சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க.

# கடவுளின் குழந்தைகள் காவலர்கள்





கை வலிக்க கயிறேரி,
கால் கடுக்க எல்லை தாண்டி,
காவலில் சேர்ந்தேன்,
கைத்தடி பிடித்தேன்..!

ஆந்தைப் போல இரவில் விழித்து,
பருந்தைப் போல பகலிலும் பறந்தேன்...!

விதியோ விளங்கானது,
மதியே விளக்கானது,
வீதியே வீடானது..!

இரவுத் தூக்கம் எனக்கில்லை,
உறவின் ஏக்கம் எனக்குண்டு....!

ஒரு நாள் உறவு, பல நாள் துறவு,
கொசுவின் கொஞ்சலில் குட்டித் தூக்கம்,
சிசுவின் கொஞ்சலில் கூடும் ஏக்கம்,
ஏனோ எனக்கு மனதில் தாக்கம்..!

உண்ணும் நேரம் உணவில்லை,
நான் உறங்கும் நேரம் இரவில்லை...!

பசித்த பல வேலைகளில்
ருசிக்கத் தேநீர்தான் எங்களுக்கு தீனி..!

கொட்டும் மழையென்ன?
குளிரும் பனியென்ன?
கொளுத்தும் வெயிலென்ன?
காடென்ன, மலையென்ன,
கடலென்ன நதியென்ன?

நாளொரு இடம்,
பொழுதொரு பணியென்று,
போகாத இடமில்லை,
புரியாத பணியில்லை..!

நல்லதுக்கும் கெட்டதுக்கும்,
பணிநிமித்தமாக செல்லும் நாங்கள்,
அதே நல்லதுக்கும் கெட்டதுக்கும்,
ஊரார் உறவினருடன் பங்கேற்று,
குடும்பம் குட்டியென்று,
குதூகல வாழ்க்கை வாழந்ததுமில்லை..!

உங்களின் கொண்டாட்டம்,
எங்களுக்கு திண்டாட்டம்..!

கோவில் குளம், அடிதடி ஆர்பாட்டம்,
மறியல் போராட்டம், நீரோட்டம் தேரோட்டம்,
குத்துச்சண்டை, குழாய்சண்டை அனைத்திலும்
நாங்கள்தான் பலிகடா..!

காக்கியை கௌரவப்படுத்த, காவலில் சிலருண்டு,
காக்கியை கலங்கப்படுத்த, மனிதரில் பலருண்டு,
இருந்தும் வெறுத்ததில்லை,
நான் காதல் கொண்ட காக்கியை...!

உடம்பிற்கு உயிர் காவல்,
உலகுக்கு ஒளி காவல்,
கடலுக்கு கரை காவல்,
கண்ணுக்கு இமை காவல்,
மழலைக்கு தாய் காவல்,
இளமைக்கு துணை காவல்,
மனிதருக்கு மனம் காவல்,
காவலே கதியெனவிருக்கும்
எங்களுக்கு யார் காவல்?

காவலர்கள் கடவுளின்
கைக்குழந்தைகள்..!

















# திண்டுக்கல் காவல் துறையில் ஓய்வு பெற்றவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப் IPS சான்றிதழ் வழங்கினார்

திண்டுக்கல் மாவட்ட காவல் துறையில் பணிபுரிந்து 31.03.2024-ம் தேதியுடன் பணி ஓய்வு பெற்ற திண்டுக்கல் நகர தெற்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் திரு.D.சேரலாதன் அவர்கள், சின்னாளப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.C.மைக்கேல் டேவிட் அவர்கள், கள்ளிமந்தயம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.G.குமாரபாண்டியன் அவர்கள், அம்மையநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.S.கருப்பையா அவர்கள், குஜிலியம்பாறை காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.P.கருப்பதுரை அவர்கள், எரியோடு காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.S.வேலுசாமி அவர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப் IPS அவர்கள் நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து பணி பாராட்டு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள்.

நிருபர்: P.சதீஷ், திண்டுக்கல்.

# காணாமல் போன சிறுவனை 1 மணி நேரத்தில் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்த குமரி மாவட்ட போலீசார்

திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த செல்வம்- தீபா தம்பதியினர் குடும்பத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சுற்றுலா வந்த நிலையில், நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரி செல்லும் போது தனது 7 வயது மகனை தவறவிட்ட நிலையில் தகவலின் பேரில் தீவிர தேடுதல் விசாரணை மேற்கொண்டு வடசேரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மேரி மெரிபா அவர்கள் அந்த சிறுவனை பத்திரமாக மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தார் என்பது குறிப்பிடதக்கது. மேலும் குழந்தையின் பெற்றோர்கள் காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்தனர்.

நிருபர்:J.ஜெயவேல்முருகன்,
கன்னியாகுமரி.



# தேசிய அளவிலான சிறகு பந்து போட்டியில் தங்க பதக்கம் வென்ற ஆய்வாளருக்கு பாராட்டு




16-ஆவது அனைத்து இந்திய காவல்துறை சிறகு பந்து போட்டி கடந்த 17.03.24 முதல் 23.03.24 வரை தெலுங்கானா மாநிலம், ஹைதெராபாத்தில் நடைபெற்றது. இதில் 29 மாநிலத்தை சேர்ந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் கலந்து கொண்டனர். இதில் தமிழக அணி சார்பாக மதுரை மாநகர காவல் ஆய்வாளர் திருமதி. ஹேமமாலா அவர்கள் (ஆள்கடத்தல், மற்றும் குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு) கலந்து கொண்டு தனி நபர் மற்றும் இரட்டையர் பிரிவில் இரண்டு தங்க பதக்கங்கள் வென்றுள்ளார். மதுரை மாநகர காவல்துறை ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS., அவர்கள் பதக்கம் வென்ற ஆய்வாளரை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து பாராட்டினார்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ்,
மதுரை.




# குழந்தைகளே +2 க்கு பிறகு என்ன செய்ய போறீங்க?

அன்பு மாணவச் செல்வங்களே

நீட் நீட் என்று அனைவரும் டாக்டராகி ஊசி போட வேண்டும் என்பது தான் உங்களது எதிர்கால திட்டமா புரியவில்லை...

சரி உங்களில் எத்தனை பேருக்கு திருவாரூர் Central University பற்றிய விவரம் தெரியும்...?

அப்படித் தெரியவில்லை என்றால் இதோ தெரிந்து கொள்ளுங்கள்..! தற்போது 12ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு உபயோகப்படும்.

மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பாக மத்திய அரசால் மாநிலத்துக்கு ஒன்றென 'மத்திய பல்கலைக் கழகம்' என்ற பெயரிலேயே 13 பல்கலை கழகங்கள் (சென்ட்ரல் யுனிவர்ஸிட்டிகள்) நடத்தப்பட்டு வருகின்றன.

இது போக, அஸ்ஸாம் பல்கலைக்கழகம், சில்சார் அஸ்ஸாம் மாநிலம், பாபா குலாம் ஷா பாதுஷா பல்கலை கழகம் ராஜோரி, ஜம்மு காஷ்மீர் மாநிலம், பெங்களூரு டாக்டர் அம்பேத்கார் ஸ்கூல் ஆஃப் எக்கானமிக்ஸ் யூனிவர்ஸிட்டி, காலிக்கோட் பல்கலை கழகம் பேரம்பூர், ஒடிஸா மாநிலம் சர்தார் படேல் யூனிவர்ஸிட்டி ஆஃப் போலீஸ் செக்யூரிட்டி மற்றும் கிரிமினல் ஜஸ்டிஸ் ஜோத்பூர் என பிற ஐந்து யூனிவர்ஸிட்டிகளும் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் நடத்தப்படுகின்றன.

பொதுவாக இந்த பல்கலைக்கழகங்களைப் பற்றிய விவரங்கள் தமிழ்நாட்டில் நிறைய மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தெரியவே இல்லை.

தமிழ்நாட்டில் இந்த பல்கலைக்கழகம் திருவாரூர் அருகே இருக்கிறது. இந்த பல்கலைக்கழகம் ஒவ்வொரு வருடமும் 200 மாணவர்களுக்கு இண்டக்ரேட்டட் கோர்ஸ்களுக்கான அட்மிஷன் தருகிறது.

Integrated MSc (Chemistry, Physics, Maths , Life Sciences), Integrated MA ECONOMICS. இது போக மாஸ்டர்ஸ் டிகிரி கோர்ஸ்களும் எம்பிஏ கோர்ஸுகளும் பிஎச்டி கோர்ஸுகளும் தனித்தனியே நடத்தப்படுகின்றன.

இங்கே படிக்கும் மாணவர்களில் பாதி பேர் கேரளாவைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். மீதிப்பேரில் மற்ற மாநிலத்தவர்கள் இருக்கிறார்கள் தமிழ்நாடு உட்பட.

ஒரு செமஸ்டருக்கு பீஸ் என்று பார்த்தால் மூவாயிரத்திலிருந்து எட்டாயிரத்துக்குள் வருகிறது. இது போக ஆண்கள் பெண்களுக்கு தனித்தனி ஹாஸ்டல் வசதியும் இருக்கிறது. ஹாஸ்டல் கட்டணங்களும் மிக மிக குறைவே.

ஆனால் இப்படி ஒரு கல்வி நிறுவனம் இருப்பது

தமிழ்நாட்டில் நிறைய பெற்றோர்களுக்கு மாணாக்கர்களுக்கு தெரியவே இல்லை என்பது வருத்தத்துக்குரிய விசயம்.

**எப்படி இந்த பல்கலை கழகங்களில் சேர்ந்து படிப்பது**

18 மத்திய பல்கலைக்கழகங்களில் எந்த பல்கலைக்கழகத்திலும் வேண்டுமானாலும் சேர்ந்து படிக்க ஒட்டு மொத்தமாக ஒரே ஒரு நுழைவுத் தேர்வு தான் நடத்தப்படுகின்றது. cucet exam. Central University common entrance exam.

+2 முடித்து 50 சதவீத மதிப்பெண் பெற்றிருந்தாலே போதுமானது. நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு கவுன்ஸிலிங் மூலம் மாணாக்கர்களின் விருப்பத் தேர்வுகளுக்கு தக்க அட்மிஷன் வழங்கப்படுகின்றன. இந்த தேர்வுக்காக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

www.cuet.samarth.ac.nic.in

மேலும் எல்லா விவரங்களும் இந்த தளத்தில் இருக்கின்றன. எந்தெந்த பல்கலைக்கழகங்களில் என்னென்ன கோர்ஸ்கள் நடத்துகிறார்கள் என்பதை அறிய, அந்தந்த பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் சென்று பார்க்கலாம். பல்கலைக்கழகங்களின் பெயர்களும் இணைய தள முகவரியுடன் மேற் சொன்ன தளத்திலேயே விவரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மத்திய பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகள் குறித்த கூடுதல் விவரங்களை அறிய விண்ணப்பிப்பது தொடர்பான தொழில்நுட்பப் பிரச்னைகளுக்கு 011-40759000 எனும் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பெறலாம்.

படிப்புகள், கல்வித்தகுதி உள்ளிட்ட கூடுதல் தகவல்களுக்கு அசாம் - 9476897510, 9401847943 ஆந்திரப்பிரதேசம் - 9640884806, 7598413970, குஜராத் – 079 - 23977446, அரியானா – 9212884894, ஜம்மு - 8082197957, 9796665505, 8178118948, ஜார்கண்ட் – 7070630510, கர்நாடகா – 9972191661, 9242355484, கேரளா - 0467 - 2309467, 0467 – 2309460, பஞ்சாப் - 9464269330, இராஜஸ்தான் – 7014588311, தெற்கு பீகார் - 0631-2229514, 2229518, தமிழ்நாடு - 04366 - 277337 எனும் மத்திய பல்கலைக்கழகங்களின் அலைபேசி / தொலைபேசி எண்களில் அலுவலக நாள்களில் தொடர்பு கொண்டு பெறலாம். cucet@nta.ac.in எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டும் தகவல்களைப் பெறமுடியும்.

நிறைய பேருக்குத் தெரியப்படுத்துங்கள். தமிழ்நாட்டிலேயே வெறும் 5 கல்லூரிகளில் மட்டுமே B.A. டிபென்ஸ் என்னும் படிப்பு உள்ளது.

இதைப் படித்தால் Group of 1 examல் எளிதில் வெற்றியடைந்து Sub Registrar, RTO, DSP, நகராட்சி கமிஷனர் போன்ற நல்ல வேலைகளில் சேரலாம்.

சென்னையிலுள்ள CMI ல் B.Sc. Maths or Physics பயின்றால் உங்களுக்கு மாதம் ரூ.5,000/- உதவித் தொகையும், மேலும் கூடுதலாக வருடத்திற்கு ரூ.20,000/- உங்களுக்குத் தேவையான பாட சம்மந்தமான பொருட்கள் வாங்குவதற்கும், ஆகமொத்தம் ஒரு வருடத்திற்கு ரூ.65,000/- உதவித் தொகை கிடைக்கும்.

அக்ரி (விவசாயம்) பாடம் பயில விரும்புபவர்கள் திருச்சி அருகிலுள்ள கல்லூரிகளில் சேர முயல்வது நன்மையளிக்கும். ஏனெனில், இக்கல்லூரிகளில் டொனேஷன் கிடையாது.

திருவாரூரில் மத்திய பல்கலைக் கழகம் (Central University) உள்ளது. இதில் பயிற்சிக் கட்டணம் மிகவும் குறைவு. மேலும், இப்பல்கலையில் பயின்றால், மேற்படிப்பிற்காக நீங்கள் வெளிநாடுகளில் உள்ள யூனிவர்ஸிடி சென்றால் எவ்வித நுழைவுத் தேர்வும் எழுத வேண்டியதில்லை.

இந்த தகவலை படியுங்கள்

Neet JEE எழுதும் மாணவர்கள் மற்றும் commerce students இதை அனைவருக்கும் உங்கள் வலைதளத்தில் பகிருங்கள். இது ஒரு வரப்பிரசாதம். தயவுசெய்து இதை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேருங்கள்.

Application open last date March 10th

இதைப் பற்றி மேலும் அறிய

Contact: Acharya education, Madurai.
9865440099.







## கொடைக்கானலில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள

# அரசு கட்டிடங்களை காவல்துறையினருக்கு தங்கும் விடுதி ஏற்படுத்த கோரிக்கை

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் முக்கிய சுற்றுலா இடமாக இருந்து வருகிறது. இங்கு தமிழக மட்டுமன்றி பல்வேறு மாநிலங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகளும் வருகை தருகின்றனர். கொடைக்கானலில் அண்ணா சாலையில் காவல் நிலையம் அமைந்துள்ளது.

கொடைக்கானலில் நடக்கும் குற்றச் சம்பவங்களுக்கும் கொடைக்கானலில் இருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள மேல்மலை கிராமங்களான மன்னவனூர், பூண்டி, குண்டு பட்டி, பூம்பாறை உள்ளிட்ட கிராமங்களுக்கு கொடைக்கானலில் இருந்து காவலர்கள் செல்லும் நிலையும் இருந்து வருகிறது.

இந்த சூழலில் கொடைக்கானலில் வார விடுமுறை மற்றும் தொடர் விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படும் சூழலில் கூடுதலாக காவல்துறையினர் நியமிக்கப்படுவர். மேலும் கொடைக்கானலில் ஏப்ரல் மே மாதங்களில் சீசன் நிலையில் கூடுதல் காவலர்கள் போக்குவரத்து மற்றும் சட்டம் ஒழுங்கை காக்க நியமிக்கப்படுவர்.

அவ்வாறாக நியமிக்கப்படும் காவலர்கள் தனியார் மண்டபங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் மொத்தமாக இருக்கும் சூழல் உள்ளது. இதனால் அவர்கள் பல்வேறு உடல் உபாதைகளுக்கும் ஆளாகும் சூழல் ஏற்பட்டு உள்ளது. மேலும் இந்தியா முழுவதிலும் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது.

கொடைக்கானலில் வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு பணிக்காக காவலர்கள் இருப்பர். அவர்களுக்கு தேவையான வசதிகளும் அவ்வப்போது மட்டுமே ஏற்படுத்தப்படும். அவர்கள் பாதுகாப்பு பணிக்கு வரும் வேளையிலும் தங்கும் இடம் மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை மேம்படுத்த வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், கொடைக்கானல் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள வருவாய் துறையினருக்கு சொந்தமான பல்வேறு கட்டிடங்கள் இருந்து வருகிறது. இந்த கட்டிடங்கள் அனைத்தும் சேதமடைந்து மற்றும் சமூகவிரோத கூடாரங்களாகவும் மாறி வருகிறது. இதனால் அப்பகுதியில் வழியே பொதுமக்கள் அன்றாட பணிகளுக்கு வரும் அரசு ஊழியர்கள் உட்பட சென்றுவர முடியாத நிலையில் இருந்து வருகிறது. எனவே, இதனை வருவாய்த் துறையினர் காவல் துறையினருக்கு வழங்கி பாதுகாப்பு பணிகள் உள்ளிட்டவைக்கு பாதுகாப்பது இதற்கு வரும் காவலர்களுக்கு தங்கும் விடுதியாக மாற்றி தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையும் தற்போது எழுந்துள்ளது.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்.



வெளிநாடுகளுக்கு சுற்றுலா அழைத்து செல்வதாக கூறி

# கொடைக்கானலில் பணமோசடி செய்த பெண்கள் உட்பட 7 பேர் கைது

## காவல் துறையினர் அதிரடி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் சுற்றுலாப்பயணிகளை வெளிநாட்டிற்கு இன்ப சுற்றுலா அழைத்து செல்வதாக கவர்ச்சிகரமான வார்த்தை கூறி ஆன்லைனில் பணம் பறிமாற்றம் செய்ய வைத்து பண மோசடியில் ஈடுபட்ட வடமாநில பெண்கள் இருவர் உள்ளிட்ட 7 நபர்கள் காவல்துறையால் கைது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் சர்வதேச சுற்றுலாதலமாகும், இங்கு நிலவும் இதமான காலநிலையை கொண்டாடி மகிழ தமிழகமட்டுமின்றி, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநில சுற்றுலாப்பயணிகள் நாள் தோறும் வருவது வாடிக்கையான ஒன்று,

இந்நிலையில் சுற்றுலா வரும் சுற்றுலாப் பயணிகளை குறி வைத்து அவர்களிடம் கவர்ச்சிகரமான வார்த்தைகளை கூறி விளம்பரங்களை காட்டி விளம்பரத்தில் பரிசு விழுந்தால் வெளி நாட்டிற்கு அழைத்து செல்வதாகவும் வருடத்திற்கு 7 நாட்கள் 10 வருடத்திற்கு உலகத்தில் எந்த மூலையில் வேண்டுமானாலும் தங்கலாம் என ஆசை வார்த்தைகள் கூறியும், இதற்கு நபர் ஒன்றிற்கு ரூ.1,75,000 கட்டணம் ஆன்லைனில் செலுத்த வேண்டும் எனவும் பல சுற்றுலாப்பயணிகளிடம் பணம் பறித்து வந்துள்ளது.

இந்த டிப்டாப் வட மாநில கும்பல், இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோயம்புத்தூரை சேர்ந்த சுற்றுலாப் பயணியான ராஜ்குமாரையும் இந்த வட மாநில கும்பல் பிரையண்ட் பூங்கா அருகே அணுகியுள்ளது, இவர்களின் கவர்ச்சி வார்த்தையில் மயங்கிய ராஜ்குமார் உலக நாடுகளுக்கு சுற்றுலா செல்லும் ஆசையில் வட மாநில கும்பல் கூறிய வெப்சைட் மூலம் 2 நபர்களுக்கு (3,50,000) மூன்றரை லட்ச ரூபாய் கட்டணமாகவும் செலுத்தியுள்ளார், சில நாட்கள் கழித்து இவர்களை தொடர்பு கொண்ட போது வட மாநில கும்பல் கொடுத்த அலைபேசியும் வேலை செய்யவில்லை, வெப்சைட்டும் முடங்கியுள்ளது, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ராஜ்குமார் உடனடியாக கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவே, இதுகுறித்து கொடைக்கானல் காவல்துறையினர் தனிப்படை அமைத்து விசாரணை மேற்கொண்டதில் வடமாநிலத்தை சேர்ந்த பெண்கள் இருவர் உள்ளிட்ட 7 நபர்கள் சில மாதங்களாக இந்த மோசடியில் ஈடுபட்டதும், கொடைக்கானல் பேருந்து நிலைய பகுதியிலேயே வீடு மற்றும் பல அலுவலகம் வாடகைக்கு எடுத்து தங்கி, பல சுற்றுலாப்பயணிகளிடம் ஏமாற்று வேலையில் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததும் தெரியவந்தது.



*DSP மதுமதி*

அதனை தொடர்ந்து, ஹரியானாவை சேர்ந்த அணில் அஜய் மேக்சா(29), மும்பை தானேவை சேர்ந்த சுருதி(29), மும்பையை சேர்ந்த சாவாஜ் (30), ஒசாமா(25), ராகுல்சா(25), தெற்கு டெல்லியை சேர்ந்த சிவா(22), ஹிமாச்சல் பகுதியை சேர்ந்த தீபிகா(28) ஆகிய 7 நபர்களையும் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கும்பல் மோசடிக்கு பயன்படுத்திய ஒரு லேப்டாப், 7, செல்போன்கள், டேப்லட், போலி அடையாள அட்டை, பரிசு கூப்பன்கள் உள்ளிட்டவைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது, அதேபோல 30 லட்சம் ரூபாய் வரை பண பரிமாற்றத்திலும் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. மேலும் விசாரணையை கொடைக்கானல் காவல் துணை கண்காணிப்பாளர் மதுமதி, காவல் ஆய்வாளர் பாஸ்கரன் ஆகியோர் தீவிரப்படுத்தி உள்ளனர்.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்.

# சட்டவிரோதமாக கஞ்சா விற்ற 6 பேர் கைது



தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. T.P.சுரேஷ்குமார் B.E., M.B.A., அவர்களின் உத்தரவின் பெயரில் நடைபெற்ற அதிரடி சோதனையில் 12.03.2024 புளியங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த உள்ளார் தளவாய்புரம் பகுதியைச் சேர்ந்த பூலித்துரை என்பவரின் மகன் காசித்துரை தலைவனார்(23), தூத்துக்குடியைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரின் மகன் முத்து கல்யாணி(22), கீழப்புதூரைச் சேர்ந்த சின்னராஜ் என்பவரின் மகன் லட்சுமணகுமார்(26), ராம்குமார்(27), சிந்தாமணிப்பேரி புதூரை சேர்ந்த வெள்ளத்துரை என்பவரின் மகன் கலை செல்வன்(19), மற்றும் தூத்துக்குடியைச் சேர்ந்த 17 வயது சிறுவன் ஆகியோர் மீது காவல் ஆய்வாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் வழக்கு பதிவு செய்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். மேலும் அவர்களிடமிருந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ரூபாய் 75,000 மதிப்பிலான 7.5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

நிருபர்: K.அருணாச்சலம், புளியங்குடி.



திரு.தீபக் சிவாச் IPS அவர்கள் உத்தரவின் பேரில்

# மத்திய பாதுகாப்பு படை மற்றும் காவல் துறையின் விழுப்புரம் மாவட்ட காவல் துறை சார்பாக கொடி அணிவகுப்பு

வருகின்ற பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.தீபக் சிவாச் IPS அவர்களின் உத்தரவின் பேரில் மத்திய பாதுகாப்பு படை மற்றும் காவல் துறையின் சார்பாக இன்று பொதுமக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்கு பதிவு செய்வதை முன்னிட்டு கொடி அணிவகுப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. சுனில் அவர்களின் முன்னிலையில் மரக்காணம் காவல் ஆய்வாளர் திரு. பாபு மற்றும் கோட்டகுப்பம் காவல் ஆய்வாளர் திரு.சக்தி, மத்திய பாதுகாப்பு படை DSP திரு. ராவத், ஆய்வாளர் திரு. ஜெகதீஷ் ஆகியோர் தலைமையில் மரக்காணம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட துரோபதி அம்மன் கோவிலில் இருந்து துவங்கி மரக்காணம் காவல் நிலையத்தில் முடிவுற்றது.

இதேபோல கோட்டகுப்பம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சந்திராயன் குப்பத்தில் துவங்கி கோட்டகுப்பம் காவல் நிலையத்தில் கொடி அணிவகுப்பு நிறைவு பெற்றது.

நிருபர்: R.ராமநாதன், விழுப்புரம்.



காவல்துறை சார்பாக மக்கள் அச்சமின்றி பாதுகாப்புடன் வாக்களிக்க

# கோவை SP பத்ரிநாராயணன் IPS தலைமையில் கொடி அணிவகுப்பு

கோவை மாவட்ட காவல்துறை சார்பாக தொண்டாமுத்தூர் பகுதியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

கோவை மாவட்டத்தில் வருகின்ற நாடாளுமன்ற தேர்தல்-2024, பாதுகாப்பை முன்னிட்டு மக்கள் பயமின்றி வாக்களிக்கவும் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பத்ரிநாராயணன் IPS அவர்களின் தலைமையில் (25.03.2024) சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவுள்ள தொண்டாமுத்தூர் சார்பு பதிவாளர் அலுவலகத்தில் இருந்து புதுப்பாளையம் பிரிவு வரை மாவட்ட காவல்துறையினர், ஊர்க்காவல் படையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் என சுமார் 200, நபர்கள் இணைந்து கொடி அணிவகுப்பு மேற்கொண்டனர்.

இக்கொடி அணிவகுப்பில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிருபர்: P.நடராஜ், கோவை.

---

# போக்சோ வழக்கில் இளைஞருக்கு 15 ஆண்டு சிறை, ரூ.5,000 அபராதம்



தண்டனை பெற்று தந்த திண்டுக்கல் மாவட்ட காவல் துறையினர்

01.04.2024 திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2022-ஆம் ஆண்டு சிறுமியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வு செய்த குளத்தூர் பகுதியை சேர்ந்த கவின்குமார்(25) என்பவரை தாடிக்கொம்பு காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், இவ்வழக்கு திண்டுக்கல் விரைவு மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் A.பிரதீப்,IPS அவர்களின் அறிவுறுத்தலின்படி திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் திரு. சந்திரமோகன் அவர்கள், நீதிமன்ற தலைமைக் காவலர் திருமதி.சாந்தி அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.ஜோதி அவர்களின் சீரிய முயற்சியால் 01.04.2024-ம் தேதி திண்டுக்கல் விரைவு மகிளா நீதிமன்ற நீதிபதி அவர்கள் குற்றவாளி கவின்குமார் என்பவருக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள்.

நிருபர்:P.சதீஷ், திண்டுக்கல்.



SP திரு.ஹர்ஷ் சிங் IPS

# ஆன்லைனில் பணமோசடி செய்தவரை கைது செய்த நாகப்பட்டின போலீஸார்

## சைபர் கிரைம் காவல்துறையினர் அதிரடி நடவடிக்கை

நாகப்பட்டினம் மாவட்டம் சைபர் க்ரைம் காவல் நிலையத்திற்கு NCRP மூலமாக திரு.மணிகண்டன் த/பெ.ராஜேந்திரன் (எண்.56, அண்ணா நகர் இடையத்தங்குடி, நாகப்பட்டினம்.) என்பவரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவில் மனுதாரருக்கு குறைந்த வட்டிக்கு லோன் தருவதாக கோரி மனுதாரரிடம் இருந்து வங்கி விவரங்களை பெற்றுக் கொண்டு ரூபாய் 20 ஆயிரத்தை ஏமாற்றிய அடையாளம் தெரியாதவரிடமிருந்து பணத்தை மீட்டுக் கொடுக்குமாறு கிடைக்கப் பெற்ற புகாரின் அடிப்படையில் CR 01/2024 u/s 420 IPC 66 C 66D IT ACT 2008 வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கின் மேல் நடவடிக்கையில் குற்றவாளி பல்வேறு தொலைபேசி எண்களை போலியான ஆவணங்களை கொடுத்து வாங்கி பயன்படுத்தி வருவது தெரிய வந்தது.

மேலும் பகுதி நேர வேலை தேடும் நபர்களை குறி வைத்து அவர்களை வேலைக்கு தேர்வு செய்வதுபோல தேர்வு செய்து தனது குற்ற செயலுக்கு பயன்படுத்தி வருவது தெரிய வந்தது.



குற்றவாளி

மேலும் சம்பவத்திற்கு பயன்படுத்திய தொலைபேசி எண்களின் அடிப்படையில் தமிழ்நாட்டில் இதுபோல மேலும் 29 மாவட்டங்களில் 34 குற்ற சம்பவங்கள் நடந்துள்ளதாக NCRPQ புகார் கிடைக்கப்பெற்றுள்ளது.



ADSP திருமதி.மகேஸ்வரி

வழக்கின் புலன் விசாரணையில் எதிரி பயன்படுத்திய எண்களின் வழியாகவும், பண பரிவர்த்தனைகள் வழியாகவும் சுமார் ரூ.12 லட்சம் மோசடி செய்த தேடப்பட்ட குற்றவாளியான குமரேசன் 33/24 த/பெ.முரளி (எண் 35/46, 56 சங்கன் தெரு, கருங்கல்பாளையம், ஈரோடு மாவட்டம்) என்பவரை நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஹர்ஷ் சிங் IPS அவர்களின் உத்தரவின் பேரில், நாகப்பட்டினம் மாவட்டம் சைபர் க்ரைம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ADSP திருமதி. மகேஸ்வரி அவர்கள் தலைமையில், தனிப்படை அமைக்கப்பட்டு சைபர் க்ரைம் காவல் உதவி ஆய்வாளர் N.திருக்குமரன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.P.சரசு ஆகியவர்கள் அடங்கிய காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு குற்றவாளியை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இணையாசிரியர்: U.மதனகோபால்





செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப: editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438




**FORM – IV**
**(See Rule-8)**
**statement about ownership of**
**"POLICE PARVAI" Tamil Monthly**

as required to be published under section is 19-D sub section (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the Registration of Newspapers (Central Rules) 1956

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | : Chennai |
| 2. | Periodicity of its Publication | : Monthly |
| 3. | Printer's Name<br>Nationality<br>Address | : Meeraoffset printers<br>: Indian<br>: No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai 600 005 |
| 4. | Publisher's Name<br>Nationality<br>Address | : N.Balakrishan<br>: Indian<br>: 4B, GD.Floor, 4th Black Aditi Paradise No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. |
| 5. | Editor's Name<br>Nationality<br>Address | : N.Balakrishan<br>: Indian<br>: 4B, GD.Floor, 4th Black Aditi Paradise No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. |
| 6. | Name and Address of Individual who own the newspapers and patners of one percent of the total Capital | : N.Balakrishan 4B, GD.Floor, 4th Black Aditi Paradise No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099 |

I, N.BALAKRISHAN hereby declare that the above particulars given above are true to the best of my knowledge and belief.

Place : Chennai
Date : 01.04.2024

S/d. N.Balakrishan
Publisher

## தென்காசி மாவட்டத்தில் ஒரே நாளில்

# 5 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைப்பு



*SP திரு.T.P.சுரேஷ்குமார் B.E.,M.B.A.*

தென்காசி மாவட்டம், புளியங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட உள்ளார் பகுதியை சேர்ந்த பூலித்துரை என்பவரின் மகன் காசித்துரை தலைவனார் கார்த்திக்(23), தூத்துக்குடியை சேர்ந்த தங்கராஜ் என்பவரின் மகன் முத்துகல்யாணி(22), சிந்தாமணிபேரிப்புதூரை சேர்ந்த வெள்ளத்துரை என்பவரின் மகன் கலைச்செல்வன்(19)ஆகிய மூன்று நபர்கள், தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையம் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட அச்சன்புதூர் பகுதியை சேர்ந்த முஸ்தபா கனி என்பவரின் மகன் பீர் முகமது(52) மற்றும் புளியங்குடி காவல் நிலையத்தில் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தாருகாபுரம் ராமர் பாண்டியன் என்பவரின் மகன் மணிகண்டன்(40) ஆகியோரை பிரிவு 14 தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.T.P.சுரேஷ்குமார் B.E., M.B.A., அவர்கள் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவின் பேரில் மேற்படி 05 நபர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.

இயற்கை வாழ்வியலும் உடல்நலமும்



# சின்ன வெங்காயத்தின் அரிய பலன்கள்

**ஒரு கைப்பிடி சின்ன வெங்காயம் இருந்தாலே போதும்.. சின்ன சின்ன உடல்நலக் கோளாறுகளையும் அசால்ட்டாக தீர்க்கலாம். எப்படி தெரியுமா? 100 கிராம் சின்ன வெங்காயத்தில் நீர்ச்சத்து, புரதம், கார்போஹைடிரேட். கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்தும், வைட்டமின் "B", வைட்டமின் "C" கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து இப்படி அனைத்தும் அடங்கியிருக்கின்றன.**

காரத்தன்மை: வெங்காயத்தின் காரத்தன்மைக்கு காரணம் "அலைல் புரோப்பைல் டை சல்பைடு" என்ற எண்ணெய்தான்.. வெங்காயம் உரிக்கும்போது, நம்முடைய நமக்கு கண்ணீர் வருவதற்கு காரணமும் இந்த எண்ணெய்தான். உடலிலுள்ள கெட்ட நீரை வெளியேற்றக்கூடியது இந்த சின்ன வெங்காயம். ருசிக்காக மட்டுமல்லாமல், உடல் உபாதைகளுக்கும் இந்த சின்ன வெங்காயத்தை மருந்தாக பயன்படுத்தலாம்.. காலை, மதியம், மாலை, இரவு என்று 4 வேளைக்கு அரை ஸ்பூன் சின்ன வெங்காய சாறு சாப்பிட்டு வந்தால், நம்முடைய நுரையீரல் பலப்படுமாம்.. நுரையீரலில் தங்கியிருக்கும் அழுக்குகள், கழிவுகள், நச்சுக்கள் வெளியேறிவிடும்.

சுவாச கோளாறுகள்: ஜலதோஷம், இருமல், காய்ச்சல், நெஞ்சுசளி வந்தாலும், வெங்காய சாறுடன் சம அளவு தேன் கலந்து சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கிறது.. இதயத்துக்கு மிகவும் நன்மை தரக்கூடியது சின்ன வெங்காயம்.. நெஞ்சுவலி பிரச்சினை இருப்பவர்கள் தினமும் வெங்காயத்தைப் பச்சையாக சாப்பிட்டு வந்தால் இதயம் பலம் பெறும்.. ரத்தம் உறையும் பிரச்சினையும் சீராகும்.

உடல் எடை குறைய வேண்டுமானாலும், சின்ன வெங்காயத்தை பச்சையாக சாப்பிட்டாலே நிறைய ஊட்டச்சத்து கிடைக்குமாம்.. காரணம், சின்ன வெங்காய சாறு கொழுப்பை கரைக்கும் தன்மையுடையது.. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தக்கூடியது.. முக்கியமாக, புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள் சின்ன வெங்காயத்தில் நிறையவே உள்ளன.

ரத்த சோகை: வெங்காயத்தில் வைட்டமின் E நிறைந்துள்ளதால், கண் சம்பந்தப்பட்ட கோளாறுகளை தடுக்கிறது. இரும்பு சத்து அதிகமுள்ள வெங்காயம், ரத்த சோகையை குணமாக்குகிறது.. மலச்சிக்கல் இருப்பவர்களும், வெங்காயத்தை நறுக்கி

விளக்கெண்ணெயில் வதக்கி சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கும். உடலில் பித்தம் அதிகமாக சேர்ந்துவிட்டால், 4 சின்ன வெங்காயத்தை தோலுரித்து, சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டால், பித்தம் நீங்கும்.

வாய் சுகாதாரம்: பல் வலி இருந்தாலும், வெங்காயத்தை ஒரு துண்டு எடுத்து பல்வலி உள்ள இடத்தில் வைத்தால் உடனே வலி குறையும்.. சொத்தைப் பல் உள்ள இடத்தில் வைத்தாலும், அந்த பல்லுக்குள் இருக்கும் புழுக்கள் வெளியேறிவிடும்... பாக்டீரியாக்கள், தொற்றுக்களும் அழிந்துவிடும்... சின்ன வெங்காயத்துடன், 2 புதினா இலைகளையும் சேர்த்து வாயில் போட்டு மென்று விழுங்கினால் இன்னும் நன்மை கிடைக்கும். வெங்காய நாற்றமும் வராது.. வாய்ப்புண் குணமாகும்.


மூல நோயால் அவதிப்படுபவர்களுக்கு சின்ன வெங்காய சாறு பெரிதும் கை கொடுக்கிறதாம். அதாவது, 50 கிராம் வெங்காய சாற்றில் சிறிது தண்ணீர் சேர்த்து 15 நாட்களுக்கு குடித்து வந்தால் ரத்த மூலம் கட்டுக்குள் வருமாம். அல்லது வெங்காயத்தை துண்டுகளாக்கி, சிறிது இலவம் பிசின், சிறிது கற்கண்டு தூள் சேர்த்து பாலுடன் சேர்த்து சாப்பிட்டால் மூலக்கோளாறுகளும் நீங்குகிறதாம்.

வெங்காயம்: வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்பு தளர்ச்சி சீராகும்.. வெங்காயத்தில் இன்சுலின் நிறைய உள்ளதால் சர்க்கரை நோயாளிகள் இதை தாராளமாகவே பயன்படுத்தலாம். ஆண்களுக்கு வரப்பிரசாதம்தான் இந்த சின்ன வெங்காயம்.. குறிப்பாக, விறைப்பு தன்மை பிரச்னையால் பாதிக்கப்பட்டிருந்தால், வெங்காயத்தை அப்படியே பச்சையாக சாப்பிடுவது நல்லதாம்.. காரணம், டெஸ்டோஸ்டிரோனின் அளவை அதிகரிக்க செய்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அதேபோல, வெங்காயத்தை வதக்கி தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட்டாலும் ஆண்களுக்கு நன்மை பயக்குவதாக சொல்கிறார்கள். 2 சின்ன வெங்காயத்தை இடித்து, அரை டம்ளர் தண்ணீரில் கலந்து குடித்துவந்தால் இதற்கு பலன் கிடைக்க வாய்ப்புள்ளது.

டாக்டர் ஆலோசனை: ஆனால், சின்னவெங்காயத்தை இப்படியெல்லாம் மருந்தாக எடுக்கும்போது, மருத்துவர்களின் ஆலோசனையை கட்டாயம் பெற்றே சாப்பிட வேண்டும்.

வெங்காயத்தில் வைட்டமின் A,C,K நிரம்பியுள்ளதால் நம்முடைய சருமத்துக்கு போதுமான பாதுகாப்பை தருகின்றன.. புற ஊதா கதிர்களிலிருந்தும் பாதுகாக்கின்றன. அதனால்தான், முகத்தில் ஃபேஸ்பேக் போல வெங்காய சாற்றினை பயன்படுத்துவார்கள்.. ஆனால், முகப்பரு, காயங்கள், சிறு கட்டிகள் ஏதாவது இருந்தால், இந்த வெங்காய சாறு பூசக்கூடாது.



ஆனால், நறுக்கிய வெங்காயத்தை முகப்பரு உள்ள இடத்தில் தேய்த்தால் முகப்பரு நீங்கும்.

கட்டிகள்: சருமத்தில், கட்டிகள் இருந்தாலும், இந்த சின்ன வெங்காயம் உதவுகிறது.. வெங்காயத்தை சுட்டு, சிறிது மஞ்சள், நெய் கலந்து இளஞ்சூட்டுடன் கட்டிகள் மீது வைத்து காட்டினால், நாளடைவில் கட்டிகள் பழுத்து உடையுமாம்.

அவ்வளவு ஏன்? அந்த காலத்தில் பாம்பு கடித்துவிட்டாலும் வெங்காயத்தையே மென்று தின்ன தருவார்களாம். இதனால் உடனே விஷம் இறங்குமாம்.. தேள்கொட்டிய இடத்தில், வெங்காயத்தை நசுக்கி தேய்த்தாலும், விஷம் இறங்கும் என்பார்கள்.

தலைமுடி: தலைவலி தீரவேண்டுமானால் அதற்கும் வெங்காயத்தை அரைத்து பற்று போடுவார்கள்.. தலைமுடி வளர்ச்சிக்கும் வெங்காயம் உதவுகிறது. தேங்காய் எண்ணெய் காய்ச்சும்போது, வெங்காய விழுதையும் கொட்டி காய்ச்சி வடிகட்டி பயன்படுத்தலாம்.. சின்ன வெங்காயத்தில் உள்ள சல்ஃபர் என்ற வேதிப்பொருள் இருப்பதால், தலைமுடி வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. சின்ன வெங்காயச் சாற்றை தலையில் 5 நிமிடம் மசாஜ் செய்வதனால் ரத்த ஓட்டமும் அதிகரிக்கிறது.

ஓம் காளி ஓம் நமசிவாய



கருடசித்தர்
Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

# எளிய உயிர்களின் பசி நீக்குவதே முதல் அறமாகும்

நம் அகண்ட பாரத தேசம் ஒரு அன்பான தெய்வீக தேசமாகும். நம் பாரத தெய்வீக வழிபாட்டில் அனைத்து உயிர்களையும் அன்பாக பார்க்கப்படுகிறது. நம் பாரத தெய்வீக தர்மம் ஆகும்.

நம் சித்தர்கள் அனைவரும் உயிர்களின் பசி நீக்கி உணவு படைப்பதை முதல் அறமாக கருதினார்கள். பிற உயிர்களின் பசி நீக்குவதை தெய்வீக தொண்டாக கருதினார்கள். 63 நாயன்மார்களும் ஆழ்வார்களும் இந்த சேவையை தெய்வீக வழியில் செய்து மக்களுக்கு வழிகாட்டினார்கள்.

**உணவு அளிப்பதே முதல் தொண்டு**

மனிதனுக்கு மட்டும் உணவு கொடுத்து பசி நீக்குவது சுய நலத் தொண்டாகும். ஏனென்றால் தன் இனமான மனிதன் பசி மட்டும் நீக்குகின்றான். அதுவும் ஒரு சுயநலமே. நம்மை சுற்றி அனைத்து உயிர்களும் வாழ்கின்றது. குருவி, காகம், புறாக்கள், நாய், குரங்கு, எறும்புகள், மாடுகள், பூனைகள் இன்னும் எத்தனையோ உயிர்கள் பசியால் நம்மைச் சுற்றி உணவும் நீருக்காக அலைந்து கொண்டு இருக்கின்றது. இவைகளுக்கு உணவும் நீரும் கொடுப்பது பொது நலத் தொண்டாகும்.

**பொதுநலத் தொண்டு**

பொது நலத் தொண்டு என்பது அனைத்து உயிர்களையும் அன்பு செய்து அரவணைத்து அவைகளின் தேவைகளான உணவும் நீரும் கொடுப்பதே பொதுநலத் தொண்டாகும்.

**இயற்கை சேவையை ஈசன் சேவை**

ஈசன் அனைத்து உயிர்களுக்கும் சேவை செய்யும் மனிதனையே விரும்புகின்றார். இயற்கையின் சேவையே ஈசனின் சேவையாகும். இப்படிப்பட்ட தர்மத்தையே நம் சித்தர்களும் யோகிகளும், ரிஷிகளும், ஞானிகளும் நம் பாரத மக்களுக்கு கற்றுக் கொடுத்து உள்ளார்கள். இதையே சைவர்களும் வைணவர்களும் கடைப்பிடிக்கிறார்கள்.

நம் ஆலயங்களுக்குச் சென்றால் அங்கு ஸ்தல விருட்சம் இருக்கும். ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒவ்வொரு ஸ்தல வரலாறும் ஸ்தல விருட்சமும் இருக்கும். அனைத்து கோவில்களிலும் மூலிகைச் செடிகளும் வளர்க்கப்படும். ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு எளிய உயிர்களுக்கும் அடைக்கலமாக இருக்கும்.

ஒரு கோவிலில் காகத்திற்கு உணவு படைப்பார்கள். மற்றொரு கோவிலில் குரங்குக்கு உணவு படைப்பார்கள். வேறொரு கோவிலில் மாடுகளுக்கும், நாய்களுக்கும் உணவு படைத்து அரவணைப்பார்கள். கோவில்கள் அனைத்து எளிய உயிர்களின் ஆதாரமாக உள்ளது. அனைத்து பறவைகளுக்கும் அனைத்து விலங்குகளுக்கும் கோவில்களில் ஆதரவு அளிக்கும் நம் முன்னோர்கள் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அந்த கலாச்சாரம் இன்றைய மக்கள் கோவில்களில் கடைப்பிடிப்பது குறைந்துவிட்டது.

**கோவிலுக்குச் சென்றால் யாருக்குப் பலனில்லை**

நம் கண் முன்னே எளிய உயிர்கள் பசியோடு இருக்கும்போது அவைகளை கண்டு கொள்ளாமல் அவைகளை வெறுத்துவிட்டு கோவிலுக்கு தினமும் சென்று வழிபடுவதால் ஒரு பயனும் இல்லை.

நம் கண் முன்னே இருக்கும் எறும்பு, காகம், நாய், குருவி, பறவைகளுக்கு நம்மால் முடிந்தவரை உணவும் நீரும் கொடுத்து விட்டு, கோவிலுக்குச் சென்றால் தெய்வ அருள் முழுமையாக கிடைக்கும்.

ஈசனாகிய இறைவன் மனிதனுக்கு மட்டும் உரிமையானவன் அல்ல. அனைத்து உயிர்களுக்கும் உரிமையானவன். அனைத்து உயிர்களும் அவரிடம் இருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாக்கள் ஆகும்.

**வள்ளலார் கூறிய அன்பின் அறம்**

அருட்பெருஞ்சோதி வள்ளலார் திருவருட்பாவில் அனைத்து உயிர்களையும் நேசித்து தம்உயிர் போல



எண்ண வேண்டும் என்று கூறுகிறார்.

**திருவருட்பா**

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரம்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கினார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்திருவாய் எம்பெருமான் நடம் புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கோவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்தா தாலோ

என்று அனைத்து உயிர்களிடமும் அன்பு செய்யும் தத்துவத்தை வள்ளலார் கூறுகின்றார்.

அருட்பெருஞ்சோதி வள்ளலார் உயிர்களின் மேல் அன்பு செலுத்தி அவைகளுக்கு உணவு படைப்பதே முழுமையாக கூறுகின்றார். மனிதன் மட்டும் அல்ல, அவர் வாடிய பயிரை கண்ட போதெல்லாம் மனம் வாடியவர் வள்ளலார். உயிர்களின் ஜீவ காருண்ய அன்பின் அறத்தை உலகுத்துக்கு முழுமையாக போதித்தவர் வள்ளலார் ஆவார்.

***வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்***
***வாடினேன் பசியினால் இளைத்தே***
***வீடுதோறிரந்தும் பசியாறதயார்ந்த***
***வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்***
***நீடிய பிணியால் வருகின்றோர் என்***
***நேருறக் கண்டுளந்துடித்தேன்***
***ஈடில் மாணிகளாய் ஏழைகளாய் நெஞ்சு***
***இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்.***

என்று பிற உயிர் வாடித் துன்பப்படுவதை தன் துன்பமாக கருதி வாழ்ந்தவர் வள்ளலார்.

எளிய உயிர்களின் பசி நீக்கும் அறமே முதல் அறமாக கடைபிட்த்து வாழ்ந்தவர் வள்ளலர்.

**கோடைக் காலங்களில் நாம் செய்யும் அறம்**

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் நம் வீட்டின் மாடியில் அரிசியும் நீரும் பறவைகளுக்கு வைக்க வேண்டும். நாய்கள் இருக்கும் இடத்துக்கு சென்று தண்ணீர் தர வேண்டும்.

நம் தோட்டம் காடுகளில் ஒரு பாத்திரத்தில் நீரும் அரிசியும் வைக்க வேண்டும். அனைத்து பறவைகளும் நீர் அருந்தி அரிசி உண்டு பசியாறும். இதை ஒவ்வொரவரும் ஒரு தெய்வீகக் கடமையாக செய்யவேண்டும். இப்படி செய்வது நம் ஆன்மாவுக்கு மிகப்பெரிய புண்ணியத்தை கொடுக்கும்.

**திருமூலரின் பசி நீக்கும் அறம்**

பல ஞானங்களையும் பலயோகங்களையும் ஆயற்கலை 64-யும் கற்ற சித்தர்களும் பசி நீக்கும் அறத்தை வலியுறுத்த தவறவில்லை. அந்த வழியில் திருமூலர் பாடலில் கூறுகின்றார். பெரிய அளவு பசி நீக்கும் அறம் செய்யாவிட்டாலும், நம்மால் முடிந்தவரை பசிநீக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

**திருமந்திரம்**

***யாவருக்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை***
***யாவருக்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை***
***யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைபிடி***
***யாவருக்குமாம் பிறருக்கு இன்னுரைதானே***

விளக்கம்: எந்த மலர்கள் அப்போது நமக்கு கிடைக்காவிட்டாலும் இறைவனுக்கு ஒரு பச்சிலையை கொண்டு பூஜை செய்யுங்கள். பசுவிற்கும் முடிந்தவரை உணவு கொடுங்கள்.

நாம் சாப்பிடும்போது வறியவருக்கு முடிந்த அளவு ஒரு கைப்பிடி அளவாவது உணவு கொடுங்கள். பிறரிடம் இனிமையான வார்த்தையை பேசுங்கள் என்று நம்மால் முடிந்தவரை உதவி செய்ய வேண்டும் என்று கூறுகின்றார்.

நம் முன்னோர்கள் அனைவரும் அன்னதானம் செய்வதும் மற்ற உயிர்களுக்கு உணவு அளிப்பதையும் தெய்வீக வழியில் நமக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள்

**அனைத்து மதங்களும் அன்பு போதிக்கின்றது**

இந்து கோவில்களில் அன்னதானம் செய்யப்படுகின்றது. இஸ்லாம் மார்க்கத்தில் ஏழை எளியோருக்கு உணவு படைப்பதும் உதவி செய்வதும் முக்கியமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இறைவனை தொழுவதில் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லை. அனைவரும் ஒன்றாக வழிபடும் உயர்ந்த கொள்கையை கடைப்பிடிக்கும் மார்க்கமாக இஸ்லாம் மார்க்கம் இருக்கின்றது. நோன்பு விரதமாக இருந்துஅனைத்து மக்களுக்கும் உணவு அளிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ சமயத்திலும் இயேசு கிறிஸ்துவின் அன்பு போதனை அனைத்து மக்களையும் ஈர்க்கின்றது. உன்னைப் போல் பிறரை நேசி என்ற அன்புக் கொள்கையை கிறிஸ்தவ வேதம் போதிக்கின்றது. 5,000 ஏழைகளுக்கு அற்புத சக்தியால் உணவளித்து பசி நீக்கும் அறத்தை போதித்தவர் இயேசு கிறிஸ்துவாவார்.

18 சித்தர்களும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வள்ளலாரும் நபிகள் நாயகமும் இயேசுவின் அன்பு வழியும் அனைத்தும் உண்மையாக புரிந்து கொண்டால் மனிதனின் ஆன்மா இறைவனை அடையச் செய்யயும் வழியையே போதிக்கின்றது.

அனைத்து மதங்களும் பசி நீக்கும் அறத்தை, அந்தந்த காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப போதிக்கின்றது. அனைத்து வேதங்களின் சாரமும் அன்பையும் அமைதியையும் பசி நீக்கும் அறத்தையும் போதிக்கின்றது.

அனைவரும் சாதி, மொழி, இன, மத பேதங்களை கடந்த நம் பாரத தாயின் பிள்ளைகள் என்ற உணர்வோடு மனித நேயமாக வாழ்வோம்.



# ஏப்ரல் மாதத்தில் கிரக பெயர்ச்சிகள்

கிரகங்களின் சேர்க்கை பல தாக்கங்களைத் தருவதாக இருக்கும். இலட்சுமி நாராயண யோகத்தாலும், சூரியன் – புதன் சேர்க்கையால் புதாதித்ய யோகம் உள்ளிட்டவற்றால் ரிஷப, மிதுனம், தனுசு, மகரம் உள்ளிட்ட இராசியினருக்கு சொத்து மற்றும் பண பலன்கள் கிடைக்கும்.

ரிஷப இராசி அதிபதியான சுக்கிரனும், புதனும் இணைவதால் இலக்ஷ்மி நாராயணனின் பலன் கிடைக்கும். இதன் காரணமாக உங்களுக்கு சொத்து சார்ந்த இலாபம் கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத பணப் பலன்களையும் பெறலாம். உங்களின் செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. உங்களின் ஆடம்பரம், பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக பணத்தை செலவிடுவீர்கள். உங்கள் தொழிலிலும் பல நல்ல வாய்ப்புகளைப் பெறலாம். உத்தியோகத்தில் மதிப்பும் மரியாதையும் பெறுவீர்கள்.

மிதுன இராசியினருக்கு புதன், சுக்கிரனுடன் இணைந்து உருவாகக்கூடிய இலக்ஷ்மி நாராயண யோகத் தால், நீங்கள் செய்யக்கூடிய வியாபாரத்தில் இலாபம் மற்றும் நல்ல வாய்ப்புகள் பெற வாய்ப்புகள் உண்டு. உங்களின் நிதி ஆதாயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகளும், திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் கிடைக்கும்.

தனுசு இராசிக்கு 5ம் வீட்டில் சூரியன் மற்றும் இராசி நாதன் குருவின் சேர்க்கை உங்களுக்கு அதிர்ஷ்டங் களும், பல நன்மைகளும் நிறைந்த நாளாக இருக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சியும், நற்செய்திகளும் கிடைக்கும். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலை இருக்கும். திருமணம், குழந்தை பாக்கியம் கிடைக்கும். வீடு, மனை வாங்க நினைப்பவர்களுக்கு அதற்கான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

மகர இராசிக்கு சுக ஸ்தானத்தில் சூரியன் மற்றும் குருவின் இணைவு மகிழ்ச்சியை அள்ளித் தருவதாக இருக்கும். வீட்டிலும், பணியிடத்திலும் உங்களின் செல் வாக்கும், மகிழ்ச்சியும் தரக்கூடியதாக இருக்கும். தாய் மற்றும் தாய் வழியிலிருந்து நீங்கள் நன்மைகளைப் பெறலாம்.

உங்கள் திருமண வாழ்க்கையில் சண்டை, சச்சரவுகள், கருத்து வேறுபாடுகள் தீரும். நிதி விஷ யங்களில் ஆதாயம் மற்றும் முன்னேற்றத்திற்கான ஏராளமான வாய்ப்புகள் இருக்கும். வேலையில் சுமுகமான சூழல் நிலவும். சமூகத்தில் உங்களின் மதிப்பு உயரும்.

ஏப்ரலில் நிலவும் புதன் மற்றும் சுக்கிரனின் சேர்க் கையானது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வீட்டிலும், சமூகத்திலும் உங்களின் மரியாதை அதிகரிக்கும். சில பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். அவர்களின் உதவியால் நல்ல பண பலன்கள் கிடைக்கும். இந்த மாதத்தில் உங்கள் தேவைக்காக அதிகம் அலைச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. வியாபாரத் துறையில் எதிர் பார்த்த இலாபத்தைப் பெறுவீர்கள்.

## மேஷம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, குடும்ப விவகாரங்களில் விட்டு கொடுத்துப்போவது நல்லது. அண்டை அயலாரால் ஆதாயம் உண்டு. வீண் வாக்கு வாதம், சண்டை சச்சரவுகளை தவிர்க்கவும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பயணங்களால் நன்மை உண்டாகும். வீடு, வாகனத்தை சீர் செய்ய முடியும். குல தெய்வத்தை வழிபட்டு அவர்களின் அருளை பெற முடியும். எதிரிகளால் பிரச்சினை இருந்தாலும் அவர்களால் லாபமும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். உங்களுக்கு தொடர்பில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம். வாகன பயணங்களில் கவனம் தேவை. இரவுநேர பயணங்கள் தவிர்ப்பது நல்லது. நண்பர்களால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். எந்த ஒரு காரியத்திலும் முன் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. வீண் பேச்சுக்களை குறைத்து காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கவும். அடிக்கடி பயணங்களால் வீண் செலவு உண்டாகும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வரவை விட செலவுகள் அதிகமாக தான் இருக்கும். வாடகை வீட்டில் இருப்பவர்கள் வேறு வீட்டிற்கு மாற்றலாகி செல்ல கூடும். குடும்பத்தில் சுற்றத்தார் வருகை அதிகம் இருக்கும். பழைய கடன்களை அடைக்கும் எண்ணம் இருக்கும். உடல் ஆரோக்கியம் சம்பந்தமாக மருத்துவ செலவுகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. கணவன் மனைவி இடையே ஒற்றுமை இருக்கும். உற்றார் உறவினர்களை அனுசரித்து நடந்து கொண்டால் அவர்களால் ஆதாயம் ஏற்படும். உத்யோகத்தில் பணிகளை கவனமாக மேற்கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: அம்பாள், ஸ்லோகம்: துர்க்கா தேவி ஸ்லோகம், பரிகாரம்: அம்பாளுக்கு நெய் தீபம் ஏற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: சித்திரை மாதம் 12ம் தேதி வியாழக்கிழமை 25/4/2024 மாலை 7.48 முதல் சித்திரை மாதம் 15ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 28/4/2024 அதிகாலை 3.17 மணிவரை**

## ரிஷபம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, எடுக்க நினைக்கும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி ஏற்படும். நீண்ட நாள் திட்டங்கள் நிறைவேறும். மனக்குழப்பங்கள் நாளடைவில் குறையும். முன் கோபத்தை குறைப்பது நல்லது. பொருளாதார நிலை உயரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை உயரும். புதிய முயற்சிக்கு நல்ல பலன் கிட்டும். வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். புதிய வீடு வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். நீண்டநாள் வேண்டுதல்கள் நிறைவேறும். எதிரிகளால் சிறு பிரச்னை வந்தாலும், அவர்களால் லாபம் உண்டு. வாழ்க்கைத்துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அன்றாட வேளைகளில் சிறு தடைகள், பிரச்னைகள் வந்தாலும் அனைத்தையும், கடந்து செல்லும் ஆற்றல் உண்டு. குடும்பம் முன்னேற்ற பாதையை நோக்கி செல்லும். உங்கள் கடுமையான முயற்சிக்கு உண்டான பலன் தாமதம் அனாலும் நிச்சயம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண முடியும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். பயணங்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் சந்தோசமான சூழல் நிலவும். எதிலும் தீர்க்கமான முடிவு எடுப்பதில் தடுமாற்றங்கள் ஏற்படும். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டிவரும். நெருக்கடியான நேரத்தில் உங்களை சுற்றி இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். உறவினர்களுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் சுப விரயங்கள் நிறைய உண்டு. கணவன் மனைவி இருவரும் மனம் விட்டு பேசுவது நல்லது. புது நண்பர்களுடன் மிகுந்த கவனத்துடன் பழகுவது நல்லது. வாகன பராமரிப்பு செலவு கூடும். உத்யோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் புது முதலீட்டை தவிர்க்கவும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவன், ஸ்லோகம்: சிவ ஸ்துதி, பரிகாரம்: விநாயகருக்கு நெய் தீபம் ஏற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: சித்திரை மாதம் 15ம் தேதி ஞாயிற்றுக் கிழமை 28/4/2024 அதிகாலை 3.18 மணி முதல் சித்திரை மாதம் 17ம் தேதி செவ்வாய் கிழமை 30/4/2024 காலை 8.23 மணி வரை**

## மிதுனம்

அன்பர்களே இந்த மாத பலன்படி, குடும்பத்தில் எதிர்பார்க்காத விஷயங்கள் நடக்கும். மனம் அமைதி பெறும். இது வரை இருந்த தடைகள், பிரச்னைகள் குறையும். மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதாரம் சம நிலையில் இருக்கும். நீண்ட நாளாக வரவேண்டிய பணம் கைவந்து சேரும். சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உற்றார், உறவுகளிடம் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். புதிய வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். மறைமுக எதிரிகளால் பிரச்னை இருந்தாலும் அதனை எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டு. உங்களுக்கு தொடர்பில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம். வாகன பயணங்களில் கவனம் தேவை. நீண்ட தூர பயணங்களை தவிர்ப்பது நல்லது. உடல் நலத்தில் கவனம் தேவை. உங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கவும். யாரையும் பகைத்து கொள்ள வேண்டாம். வெளியிடங்களில் வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது. பொருளாதார சிக்கல்கள் படிப்படியாக குறையும். மனக்குழப்பம் நீங்கி தெளிவு நிலை உண்டாகும். எதிரிகளின் பலம் குறையும். கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். சற்றும் எதிர்பார்க்காத வகையில் பல நற்பலன் உண்டாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்க முடியும். அடுத்தவருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். உங்களை சுற்றி இருப்பவர்கள் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: பைரவர், ஸ்லோகம்: பைரவர் அஷ்ட்டகம், பரிகாரம்: பைரவருக்கு இலுப்ப எண்ணெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: (1)பங்குனி மாதம் 20ம் தேதி செவ்வாய்க் கிழமை 2/4/2024 மாலை 12. 29 மணி முதல் பங்குனி மாதம் 23ம் தேதி வெள்ளிக்கிழமை 5/4/2024 அதிகாலை 3.42 மணி வரை (2) சித்திரை மாதம் 17ம் தேதி செவ்வாய்க்கிழமை 30/4/2024 காலை 8.24 மணிமுதல் சித்திரை 19ம் தேதி வியாழக்கிழமை 2/5/2024 பகல் 11.43மணி வரை**

## கடகம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, குடும்பத்தில் அனைத்து விஷயங்களில் ஒரு நல்ல மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும். குடும்ப பெரியோர்களின் உதவி கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரும். பொருளாதார தேவைகள் நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். வரவேண்டிய பணம் கைவந்து சேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எத்தனை தடை வந்தாலும் அதிலிருந்து மீண்டு வர முடியும். எதிரிகளால் பிரச்னை இருந்தாலும் அதை சமாளிக்க முடியும். குடும்ப விஷயங்களில் வெளியாட்களின் தலையீட்டை தவிர்ப்பது நல்லது. நண்பர்கள் விஷயத்தில் அதிக கவனம் தேவை. யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம்.கையில் எடுத்த காரியங்கள் யாவற்றையும் எளிதில் முடிக்க முடியும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்யம் மேம்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். முன் கோபத்தை குறைப்பதால் பல வகையில் நன்மை உண்டாகும். குடும்ப வரவு செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். பணவரவுகளில் ஏற்ற இறக்கமான நிலை காணப்பட்டாலும் எதிர்பாராத உதவிகள் கிடைக்க பெரும். மன அமைதிக்காக தினமும் தியானம் செய்வது நல்லது. திருமண காரியம் கைகூடும். குடும்பத்தில் விருந்தினர் வருகை அதிகரிக்கும். பெரியோர்களின் ஆசி கிட்டும். கணவன் மனைவியிடையே ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். கடன் கொடுப்பதையும் வாங்குவதையும் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொழில், வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: புத பகவான், ஸ்லோகம்: நவகிரக ஸ்லோகம், பரிகாரம்: நவகிரகத்திலுள்ள புதபகவானுக்கு நெய் தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: (1)சித்திரை மாதம் 19ம் தேதி வியாழக் கிழமை 2/5/2024 பகல் 11.44 மணி முதல் சித்திரை மாதம் 21ம் தேதி சனிக்கிழமை 4/5/2024 பகல் 2.11 மணி வரை, (2) பங்குனி மாதம் 23ம் தேதி வெள்ளிக் கிழமை 5/4/2024 அதிகாலை 3.43 மணி முதல் பங்குனி மாதம் 25ம் தேதி ஞாயிற்றுக் கிழமை 7/4/2024 அதிகாலை 6.07 மணி வரை**

## சிம்மம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, எந்த விஷயத்தையும் கொஞ்சம் தள்ளி போடுவது நல்லது. தேவையற்ற பிரச்னைகளில் தலையிட வேண்டாம். பொருளாதார நிலை தேவைக்கேற்ப இருக்கும். உங்கள் பேச்சால் அனைத்தையும் சாதிக்க முடியும். வீண்வாக்குவாதத்தை தவிர்க்கவும். உடன் பிறப்புகளிடம் மனஸ்தாபங்கள் வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. எடுக்கும் முயற்சிகளில் தடை இருப்பினும் விடாமுயற்சியால் மட்டுமே வெற்றி பெற இயலும். வீடு, வாகனம் தொடர்பான பிரச்னைகள் உருவாகும். எதிரிகளால் பிரச்னை வந்தாலும் இறுதியில் காணாமல் போவர். எந்த ஒரு விஷயத்தையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. விலகி நின்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவர். குடும்பத்தில் பழைய அமைதி திரும்பும். உங்கள் பேச்சில் கடுமை இருந்தாலும் அதில் உண்மை இருக்கும். நண்பர்களிடம் இருந்து வந்த கருத்து மோதல்கள் மறையும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும். குடும்பத்தில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிடையே தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். வெளியில் கடனாக கொடுத்த பணத்தை திரும்ப பெற முடியும். ஒரு சிலருக்கு வாடகை வீடு பிரச்சனைகள் தீரும். பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மனதில் வீண் கவலைகள் உண்டாகக் கூடும். உத்யோகத்தில் தடைகள் நீங்கி ஆதாயங்களை பெறமுடியும். தொழில், வியாபாரத்தில் ஏற்ற நிலை உருவாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: முருகன், ஸ்லோகம்: கந்த குரு கவசம், பரிகாரம் : முருகனுக்கு நெய் தீபம் ஏற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: பங்குனி மாதம் 25ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 7/4/2024 அதிகாலை 6.08 மணி முதல் பங்குனி மாதம் 27ம் தேதி செவ்வாய் கிழமை 9/4/2024 காலை 8.35 மணி வரை.**

## கன்னி

அன்பர்களே, இந்த மாத பலன்படி, மனதில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.எதிர்பார்த்த இடத்திலிருந்து தேவையான நேரத்தில் தேவையான உதவி கிடைக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் ஆழ்ந்து செல்லாமல் அளவோடு இருப்பது நல்லது. மனம் தெளிவு பெறும். கடன் பிரச்னைகள் குறையும். பொருளாதார நிலை உயரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை உயரும். புதிய நபர்கள் அறிமுகமாவர். புதிய வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். குல தெய்வ மற்றும் இஷ்டதெய்வ அனுகூலம் கிடைக்கும். மாத முற்பகுதியில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் திட்டமிட்டு செய்ய நினைத்த காரியம் விரைவில் முடியும். சஞ்சல நிலை மாறும். மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. பொது காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கும். தெய்விக காரியங்களில் ஆர்வம் கூடும். முக்கிய பிரமுகர்களின் தொடர்பு கிட்டும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வாகன யோகம் உண்டு. குடும்பத்தினர் அனைவரின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.. உத்யோகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரம் சீரான பாதையில் செல்லும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: விநாயகர், ஸ்லோகம்: விநாயகர் அகவல், பரிகாரம்: பிள்ளையாருக்கு நெய் தீபம் ஏற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம் தினம்: பங்குனி மாதம் 27ம் தேதி செவ்வாய்க் கிழமை 9/4/2024 காலை 8.36 மணி முதல் பங்குனி மாதம் 29ம் தேதி வியாழக்கிழமை 11/4/2024 காலை 12.03 மணி வரை.**

## துலாம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, எந்த சூழ்நிலையிலும் மனம் தளராமல் இருந்து வெற்றி நடை போடுவீர்கள். யாரையும் பகைத்து கொள்ள வேண்டாம். வாக்கு விரோதத்தை தவிர்க்கவும். பேச்சில் கவனம் தேவை. குடும்ப விஷயங்களை கவனமாக கையாளவும். பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு ஏற்படும் என்பதால் சிக்கனமும், சேமிப்பும் அவசியம். எடுக்கும் முயற்சிகளில் சிறு சிறு தடை இருந்தாலும் விடாமுயற்சியால் வெற்றி பெறலாம். வீடு, வாகனம், சொத்து தொடர்பான பிரச்னைகள் வந்து நீங்கும். புதிய வாகனப் பயணங்களில் கவனம் தேவை. உங்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்னைகள் குறையும். தேவையற்ற பிரச்னைகளிலும், உங்களுக்கு தொடர்பில்லாத விஷயங்களிலும் தலையிட வேண்டாம். உங்கள் திறமைக்கான அங்கீகாரம் கிடைக்க கால தாமதமாகும். பொறுமை, நிதானம் அவசியம். புத்தி சாதுரியத்தால் பல உயர்வான காரியங்களை செய்து முடிக்க முடியும். எந்த ஒரு கஷ்டத்தையும் தாங்கி கொள்ள கூடிய சகிப்பு தன்மை இருக்கும். தேக ஆரோக்கியத்தில் முன்னேற்றம் இருக்கும். குடும்பத்தில் எதிர்பாராத வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் அதை சமாளிக்க முடியும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். குடும்ப தேவைகள் ஓரளவு பூர்த்தியாகும். உங்களை சுற்றி இருப்பவர்களின் செயல்கள் உங்களது கோபத்தை தூண்டும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும். குடும்பத்தில் சலசலப்புகள் நீங்கி கலகலப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் கூடுதல் கவனம் தேவை. உத்யோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: கேது பகவான், ஸ்லோகம்: கந்த குரு கவசம், பரிகாரம் : கேதுவுக்கு நெய் தீபம் ஏற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: பங்குனி மாதம் 29ம் தேதி வியாழக்கிழமை 11/4/2024 பகல் 12.04 முதல் பங்குனி மாதம் 31ம் தேதி சனிக்கிழமை 13/4/2024 மாலை 5.20 மணி வரை.**

## விருச்சிகம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, எதையும் ஆழ்ந்து சிந்தித்து செயல்படும் சாமர்த்தியம் உண்டாகும். உங்களுக்கு தொடர்பில்லாத தேவையற்ற விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிலும் பொறுமை தேவை. அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. மனதில் தன்னம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். தேவைக்கேற்ப பொருளாதார நிலை இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் சிறு தடை இருப்பினும், விடாமுயற்சியால் அதில் வெற்றி பெற முடியும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரும். எதிர்பாராத அதிர்ஷ்டமும், தனவரவும் உண்டு. நண்பர்கள் உதவிக்கரமாக இருப்பர். சொன்ன சொல்லை காப்பாற்ற முடியும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு நிகழும். சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிக்க முடியும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து செல்வது நல்லது. ஆன்மீகத்தில் மனதை செலுத்துவதன் மூலம் மன நிம்மதி ஏற்படும். நெருங்கிய உறவினர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து தர இயலும். உடல் உஷ்ணம் சம்பந்தமான தொந்தரவு ஏற்பட வாய்ப்புண்டு, கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே பனிப்போர் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழியில் ஆதாயம் உண்டு. சிலருக்கு வீடு, வாகனம் போன்றவற்றை வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஈடேறும். பெற்றோருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பின் சீராகும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். உத்யோகத்தில் இருந்த நெருக்கடிகள் குறையும். தொழில், வியாபாரத்தில் தன லாபம் இருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சந்திரனை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது, ஸ்லோகம்: நவக்கிரக ஸ்லோகம், பரிகாரம்: சந்திரனுக்கு தேங்காய் எண்ணைய் தீபம் ஏற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: பங்குனி மாதம் 31ம் தேதி சனிக்கிழமை 13/4/2024 பகல் 5.21 மணி முதல் சித்திரை மாதம் 2-ம் தேதி திங்கள்கிழமை 15/4/2024 இரவு 12.56 மணி வரை.**

## தனுசு

அன்பர்களே, இந்த மாத பலன்படி, தேக ஆரோக்கியம் பெறும். எதிரிகள் விலகி செல்வர். பிரபலங்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை மேம்படும். நீண்டநாளாக வரவேண்டிய பணம் கைவந்து சேரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உடன் பிறப்புகளுடன் சிறு கருத்து வேறுபாடுகள் வந்து சரியாகும். அண்டை, அயலாரால் ஆதாயம் உண்டு. சொத்து தொடர்பான பிரச்னை வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. இஷ்டதெய்வ வழிபாடு அவசியம். எதிரிகளால் சிறு பிரச்னைகள் வந்து நீங்கும். கணவன் மனைவி இருவரும். ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நல்லது. எடுக்கும் முயற்சிகளில் எத்தனை தடை வந்தாலும், விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். மனதில் ஒரு இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். தேவையற்ற பயணங்களால் உடல் அலைச்சல் ஏற்படும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்க முடியும். குடியிருக்கும் வீட்டை சீரமைக்க வேண்டிவரும். பூர்விக சொத்துக்களில் இருந்து வந்த சிக்கல் தீரும். குடும்பத்தில் சுப செலவுகள் அதிகம் இருக்கும். உறவினர்கள் வழியில் பண விரையம் ஏற்படும். புது வாகனம் வாங்கும் எண்ணம் வரும். வீடு, வாகனங்களுக்கான செலவு கூடும். மற்றவர்களுக்காக சில முக்கிய பொறுப்புகளை ஏற்க வேண்டிவரும். சாட்சி கையெழுத்திட்டு பிரச்சனையில் மாட்டிக்கொள்ள வேண்டாம். உத்யோகத்தில் அங்கீகாரம் கிடைக்கும். சிறிய முதலீட்டில் புது தொழில் ஒன்றை தொடங்க முடியும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: குருவை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது, ஸ்லோகம் : குரு அஷ்ட்டகம் ஸ்லோகம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது, பரிகாரம்: குருவுக்கு செவ்வரளி மாலை சாற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம் : சித்திரை மாதம் 2-ம் தேதி திங்கள் கிழமை 15/4/2024 இரவு 12.57 மணி முதல் சித்திரை மாதம் 5ம் தேதி வியாழக்கிழமை 18/4/2024 காலை 10.56 மணி வரை.**

## மகரம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, எத்தனை சிக்கல்கள், தடைகள் வந்தாலும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். தேவையான நேரத்தில் தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் அவசர முடிவுகளை தவிர்க்கவும். எந்த விஷயத்திலும் சிந்தித்து செயல்படவும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி அமைதி நிலவும். பொருளாதார நிலை தேவைக்கேற்ப உயரும். தடைபட்ட காரியங்கள் இனிதே முடியும். எடுக்கும் முயற்சிகளில் தடை இருந்தாலும் விடா முயற்சியால் வெற்றி கிட்டும். மனோ தைரியத்தை வளர்த்து கொள்ளவும். ஆடம்பரம் மற்றும் சுகபோகங்களில் நாட்டத்தை குறைப்பது நல்லது. வீடு, வாகனத்திற்கு செலவினங்கள் ஏற்படும். வாகன பயணங்களில் கவனம் தேவை. மாத தொடக்கத்தில் கடன் பிரச்னை இருந்தாலும், மாத இறுதிக்குள் சரியாகும். நீங்கள் இதுவரை சந்தித்த அலைச்சல்கள் மற்றும் பொருளாதார சிக்கல்கள் விலகும். மனதில் எண்ணிய காரியங்கள் எண்ணியபடி நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் மதிப்பு கூடும். எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பதில் அதிக சிரமம் இருக்கும். உணவு கட்டுப்பாட்டு அவசியம். குடும்பத்தில் பொருள் சேர்க்கை உண்டாகும். பெற்றோர்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் நிலவிய சிறு சிறு, பிரச்சனைகள் விலகி மகிழ்ச்சி கூடும். புது மனை அல்லது வீடு வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் நடக்கும். கணவன் மனைவிடையே பனிப்போர் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் சற்று சிந்தித்து செயல்படுவது நல்லது. ஆன்மீக ஸ்தலங்களுக்கு சென்று வரும் பாக்கியம் கிட்டும். உத்யோகம் தொடர்பான பயணங்கள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்கள் புரியவரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: விநாயகர், ஸ்லோகம்: விநாயகர் அகவல், பரிகாரம்: கேதுவுக்கு செவ்வரளி மாலை சாற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: சித்திரை மாதம் 5-ம் தேதி வியாழக்கிழமை 18/4/2024 காலை 10.56 மணி முதல் சித்திரை மாதம் 7ம் தேதி சனிக்கிழமை 20/4/2024 இரவு 10.26 மணி வரை.**

## கும்பம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களை தேடி வரும். தெய்வ அனுகூலம் உண்டு. திட்டமிடாத மருத்துவ செலவுகள் வர வாய்ப்புள்ளதால் சிக்கனம் தேவை. பொருளாதார நிலை உயரும். உங்கள் பேச்சால் அனைவரையும் கவர முடியும். புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். உடன் பிறப்புகளுடன் மனகசப்புகள் வந்து நீங்கும். எடுக்கும் முயற்சிகளில் தடை வந்து பிறகு சரியாகும். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. வீடு, வாகன, சொத்து தொடர்பான விஷயங்களில் கவனம் தேவை. வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு. உங்கள் அறிவுத்திறன் வெளிப்படும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்ற முடியும். எதிரிகளால் பிரச்னை வந்து சரியாகும். கணவன் மனைவிக்குள் சிறு கருத்து வேறுபாடுகள் வந்தாலும் புரிந்துணர்வு அதிகரிக்கும். குடும்ப பெரியோர்களின் ஆசி கிடைக்கும். குடும்பத்தில் அலைச்சல்கள், குழப்பங்கள் அதிகம் இருக்கும். உங்கள் பேச்சிலும், செயலிலும் நிதானத்தை கடைப்பிடிக்கவும். ஓயாத அலைச்சல் காரணமாக சோர்வு உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்களுக்கு வந்த பிரச்சனைகள் எல்லாம் பனி போல விலகி நிற்கும். உற்றார் உறவினர்களின் ஆதரவு மகிழ்ச்சி அளிப்பதாக அமையும். சற்றும் எதிர்பாராத வகையில் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். அடுத்தவர்களை நம்பி பெரிய தொகைகளை கடனாக கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. பணம் வந்தாலும், செலவுகளும் காத்துகொண்டு இருக்கிறது. குடும்ப வளர்ச்சிக்கான செலவு அதிகம் இருக்கும். உத்யோகத்தில் உங்கள் திறமைகள் வெளிப்பட ஆரம்பிக்கும். தொழில், வியாபாரம் சிறப்பாக அமையும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: அம்பாள், ஸ்லோகம்: ஸ்கஸ்ர நாமம், பரிகாரம்: லலிதாம்பாளுக்கு செவ்வரளி மாலை சாற்றுதல் நல்லது, சந்திராஷ்டமம்: சித்திரை மாதம் 7ம் தேதி சனிக்கிழமை 20/4/2024 இரவு 10.29 மணி முதல் சித்திரை மாதம் 10-ம் தேதி செவ்வாய்க்கிழமை 23/4/2024 மாலை 9.55 மணி வரை.**

## மீனம்

அன்பர்களே, இந்த மாத பலன்படி, குடும்பத்தில் விரயங்கள், மருத்துவச்செலவீனங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் சிக்கனம் அவசியம். மாத பின் பகுதியில் கூடுதல் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. மற்றவர்களை முழுமையாக நம்பி எந்த செயலிலும் இறங்க வேண்டாம். குடும்ப விஷயங்களில் அதிக அக்கறை செலுத்துவது நல்லது. வீண் விவாதங்களை தவிர்ப்பது அவசியம். பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு ஏற்படும். எந்த விஷயத்தையும் பொறுமையாக கையாளுவது நல்லது. தூர பயணங்களை தவிர்க்கவும். வீடு, வாகனம் தொடர்பான பிரச்னைகள் வந்து சரியாகும். குலதெய்வ வழிபாடு பிரச்னைகளை குறைத்து நன்மையை தரும். எதிலும் அவசரப்படாமல் நிதானமாக சிந்தித்து செயல் படுவோம். குடும்பத்தில் தடைப்பட்ட காரியங்கள் முயற்சியால் இனிதே நடைபெறும். ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். சில நேரங்களில் நீங்கள் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றுமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் சுபிட்சமும் நிறைந்திருக்கும். குடும்பத்தில் ஆடம்பர பொருள் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் சாதகமாக செயல்படுவர். உடலுக்கு ஒவ்வாத உணவு வகைகளை எடுத்துக்கொள்ள வேண்டாம். குடும்பத்தாருடன் இருந்த கருத்து வேற்றுமை அகலும். வருமானத்திற்கு மீறிய செலவுகள் இருப்பதால் அனாவசிய செலவுகளை அறவே தவிர்க்கவும். கணவன் மனைவிக்குள் அடிக்கடி ஈகோ பிரச்சனை வந்து போகும். முடிந்த வரை கடன் வாங்குவதை குறைத்து கொள்ளவும். குடும்பத்தை விட்டு பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலைகள் சிலருக்கு அமையும். உத்தியோகத்தில் அதிகாரிகள் ஆதரித்து பேசுவர். தொழில், வியாபாரத்தில் உள்ள சூட்சமங்கள் புரியவரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சனி பகவான், ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம், பரிகாரம்: சனி பகவானுக்கு எள்ளு தீபம் ஏற்றுதல், சந்திராஷ்டமம்: சித்திரை மாதம் 10-ம் தேதி செவ்வாய்க்கிழமை 23/4/2024 மாலை 9.56 மணி முதல் சித்திரை மாதம் 12-ம் தேதி வியாழக்கிழமை 25/4/2024 மாலை 7.47 மணி வரை.**



# விவேகானந்தரின் அந்திம காலம்

தாம் உடலை விட இன்னும் மூன்று நாட்கள் இருந்தபொழுது கங்கைக் கரையோரம் மூன்று பேருடன் உலாவிக் கொண்டிருந்த போது ஓரிடத்தில் நின்றார்.

மடத்து நிலத்தின் தென்கிழக்குப் பகுதியில் வில்வமரம் ஒன்று இருந்தது. அந்த வில்வ மரத்தடியில் அமர்ந்து தியானம் செய்வது சுவாமிகளின் வழக்கம். அந்த வில்வமரத்தைச் சுட்டிக்காட்டி தாம் தேகத்தை விட்ட பின்பு அதை இம்மரத்துக்கு அருகில் வைத்து தகனம் செய்து விடும்படி சுவாமிகள் உத்தரவிட்டார்.

இந்த பேச்சைக் கேட்டவர்களுக்கு என்ன விடை சொல்வது என்று விளங்கவில்லை. சடலத்தைத் துறப்பதற்கு இரண்டு நாளைக்கு முன்பு சுவாமிகள் தாமே அமுது சமைத்து அதைத் தமது சிஷ்யர்களுக்கு வழங்கினார். சிஷ்யர்களுக்குத் தம் கைப்படப் பரிமாறினார். உணவு அருந்தியான பின்பு கையலம்புதற்குத் தாமே நீர் வார்த்தார்.

ஜூலை 4ஆம் நாள் அமெரிக்கா சுதந்திர தினமாகும். நான்கு ஆண்டுகளுக்கு முன்பே காஷ்மீரில் அமெரிக்க சிஷ்யர்களுடன் அவர்களது சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிய போது சுவாமிகள் அதே ஜூலை 4 ஆம் நாள் நான்கு ஆண்டுகள் கழித்து தமது மேனியினின்று விடுதலை பெறப்போவதாக தெரிவித்திருந்தார்.

அவர் குறிப்பிட்ட நாள் 1902ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் நாள் இப்போது வருவதாயிற்று. இந்த நாளை பஞ்சாங்கத்தில் விடுதலைக்குரிய நாளாகக் குறிப்பிட்டு வைத்திருந்தார். அன்று சிவராத்திரி. ஜூலை 4ஆம் நாள் வழக்கத்துக்கு மாறாக காலையில் 8 மணியிலிருந்து 11 மணிவரை குருதேவரது பூஜையறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டு தியானம் செய்தார். ஜன்னல்களையும் மூடி வைத்துக் கொண்டார்.



***இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்***
***செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.***

*குறள் 91: இனியவை கூறல்*

**அறம் அறிந்தவர் வாயிலிருந்து பிறந்து, அன்பு கலந்து உள்நோக்கம் இல்லாது வருவதே இனிய சொல்.** *–சாலமன் பாப்பையா*

இறுதிக் காலத்தில் சிறிது ஆகாரத்தை உண்பவர் வழக்கத்துக்கு மாறாக நண்பகலில் தமது குரு சகோதரர்களுடனும், சிஷ்யர்களுடனும் பந்தியில் அமர்ந்து ஆகாரம் ஏற்கலானார். அவ்வேளையில் குதூகலமாக அனைவருடனும் உரையாடியது பந்தியில் இருந்தவர்களுக்கெல்லாம் பரமானந்தத்தை ஊட்டியது. நண்பகல் ஆகாரத்திற்குப் பிறகு சிஷ்யர்களை ஒன்று திரட்டி வைத்துக் கொண்டு 3 மணி நேரம் சமஸ்கிருத இலக்கணத்தைப் பற்றி சுவாமிகள் பாடம் நடத்த ஆரம்பித்தார்.

அன்று மாலையில் தமது குரு சகோதரர் பிரேமானந்த சுவாமிகளைத் தம்முடன் அழைத்துக் கொண்டு சுவாமி விவேகானந்தர் இரண்டு மைல் தூரம் வெளியில் சென்று உலாவி வந்தார். மடத்துக்குத் திரும்பி வந்த சுவாமிகள் கங்கைக் கரையோரம் அமர்ந்து அனைவருடனும் ஆனந்தமாக உரையாடினார்.


சந்தியா வேளை வந்தது. குருதேவர் ஆலயத்தில் ஆராதனைக்கான மணி அடிக்கப்பட்டது. எல்லாரையும் அதில் கலந்து கொள்ளும்படி பணித்தார். சுவாமிகள் தனியாக தியானம் செய்ய தமது அறைக்கு பிரம்மச்சாரி ஒருவருடன் சென்றார்.

அறையினுள் ஆசனம் விரித்து கிழக்கு முகமாக கங்கையை நோக்கிய விதத்தில் சுவாமிகள் தியானத்தில் அமர்ந்தார். சுமார் 8 மணிக்கு அந்த பிரம்மச்சாரியை அருகில் அழைத்துத் தமது தலைக்கு மேலே விசிறி வீசும்படி வேண்டினார்.

பிறகு “தியானம் செய்து கொண்டு வாயிலில் காத்திரு” என்று சுவாமிகள் பணிவிடை செய்து வந்த பிரம்மச்சாரிக்குப் பகர்ந்தார். இதுவே சுவாமிகள் பேசிய அருள் உரைகளில் இறுதியானது.

இரவு 9 மணி 10 நிமிடங்களுக்கு சுவாமிகள் அகண்ட சச்சிதானந்தத்தில் நிர்விகல்ப சமாதி எய்திவிட்டார். சாய்ந்து கிடந்த சரீரத்துக்கு என்னென்னவோ சிகிச்சை முறைகளை டாக்டர்களும், மற்றவர்களும் கையாண்டு பார்த்தார்கள். நாசித் துவாரத்திலும், நாவிலும் இரண்டொரு துளி இரத்தம் கட்டியிருந்ததாகத் தென்பட்டது.

குண்டலினி சக்தி பிரம்மரந்திரத்தைத் துளைத்துக் கொண்டு மேல் நோக்கிச் சென்றதன் புற



அடையாளமாக அது நிகழ்ந்திருக்கலாம். இதைப் பற்றிய செய்தி தந்தி வாயிலாக உலகில் பல இடங்களுக்குப் பறந்தது. கணக்கற்றோர் மறுநாள் காலையில் கல்கத்தா வந்து கூடினர்.

ஒரு கட்டிலில் வைக்கப்பட்டிருந்த திருமேனியை ஆயிரக்கணக்கானோர் தரிசித்து வணங்கினர். அன்று மாலை கங்கைக் கரையோரம் வில்வமரத்தடியில் அம்மேனியானது அக்னி பகவானுக்கு அர்ப்பிக்கப்பட்டது.

நான் விரைவில் உடலை உகுத்து விட்டு உருவமற்ற ஓசையாக இலங்குவேன். I shall be a voice without form” என சுவாமிகள் சில நாளைக்கு முன்பு பகிர்ந்திருந்தார்.



# கரூரில் சொத்துக்காக தந்தையை கொலை செய்த மகன் கைது

**கரூர் DSP செல்வராஜ் தலைமையில் அமைந்த தனிப்படை**
**3 வருடம் கழித்து துப்பு துலக்கி ஸ்கெட்ச் போட்டு தூக்கிய கரூர் போலீஸ்**
**தமிழக அளவில் காவல்துறைக்கு மேலும் ஒரு மகுடம் சேர்த்த சம்பவம்**

கரூரில் சொத்து பிரச்சனைக்காக சொந்த தந்தையை இயற்கை மரணம் போல் செட்டப் செய்து, கூலிப்படை வைத்து கொலை செய்த மகன் உள்ளிட்ட ஆறு பேர் 3 ஆண்டுகள் கழித்து கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

கரூர் மாவட்டம், நரிக்கட்டியூர் கிராமத்தை சேர்ந்தவர் நல்லுசாமி. இவரது மனைவி ஜெயலட்சுமி. இவர்களுக்கு சத்யா, சுகாசினி என்ற மகள்களும், சக்திவேல் என்ற மகனும் உள்ளனர். நல்லுசாமி பெயரில் 10, ஏக்கர் நிலமும், கொசுவலை கம்பெனியும் இருந்துள்ளது. தனக்கு சொந்தமான 10, ஏக்கர் நிலத்தில் 2, மகள்களுக்கும், தலா 4,ஏக்கர் நிலத்தை எழுதி வைத்துள்ளார். மகன் சக்திவேலுக்கு 2, ஏக்கர் நிலம் மற்றும் கொசுவலை கம்பெனியை பார்த்துக்கொள்ள கூறியுள்ளார். சக்திவேல் முதல் மனைவியை விட்டுவிட்டு, இரண்டாவதாக கிருஷ்ணவேணி என்பவரை திருமணம் செய்து தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நல்லுசாமிக்கும், சக்திவேலுக்கு சொத்து தொடர்பாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. இரண்டு அக்காக்களை விட தனக்கு தந்தை நல்லுசாமி குறைவாக சொத்து பிரித்து கொடுத்த கோபத்தில், தனது நண்பன் மாரிச்செல்வம் (எ) வினித் என்பவரிடம் இது தொடர்பாக தெரிவித்துள்ளார். மாரிச்செல்வம் கொடுத்த யோசனையின் பேரில், சென்னையை சேர்ந்த தாவீத், வினோத் குமார், வசந்தகுமார், விக்ரம், ராஜேஷ் ஆகிய ஐந்து பேரை கரூர் வரவழைத்து கடந்த 01.07.2021-ல் நல்லுசாமி கொசுவலை கம்பெனியில் இரவு தூங்கிக் கொண்டிருந்தபோது, CCTV. கேமராக்களை ஆப் செய்து விட்டு கை கால்களை பிடித்து, தலையணை வைத்து கொலை செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அனைவரும் அங்கிருந்து தலைமறைவாகிய நிலையில், மகன் சக்திவேல் மீண்டும் போடி நாயக்கனூர் சென்று விட்டார். அடுத்த நாள் காலை கொசுவலை கம்பெனியில் தந்தை தூங்கிய நிலையில், இறந்து விட்டார் என்ற தகவலை மகள்கள் இருவரும், மகன் சக்திவேலுக்கு தெரிவித்து, கரூர் வரவழைத்து இறுதி சடங்கை முடித்து விட்டனர்.



இந்த நிலையில் கொலை செய்ய வரவழைக்கப்பட்ட கூலிப்படையைச் சேர்ந்த நபர்கள் ஐந்து பேருக்கும் சக்திவேல், ஐந்து லட்சம் ரூபாய் கொடுப்பதாக பேசி இருந்த நிலையில், 1 ஒன்றரை லட்சம் மட்டும் கொடுத்துள்ளார். மீதி பணத்தை கொடுக்காமல் இழுத்தடித்து வந்த நிலையில், ஐந்து பேரும் பொது இடத்தில் கொலை சம்பவம் தொடர்பாக தொடர்ந்து பேசி வந்துள்ளனர்.

இந்த உண்மை உளவுத்துறை மூலமாக DGP அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டு, IG G.கார்த்திகேயன் IPS அவர்கள் மூலமாக திருச்சி சரக DIG மனோகரன் அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கரூர்மாவட்ட SP. பிரபாகர் அவர்கள் உத்தரவின் பேரில், கரூர் உட்கோட்டகாவல்துறை துணை கண்காணிப்பாளர் DSP V.செல்வராஜ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படை போலீசார் சென்னை, கோயம்பேடு பகுதியில் இருந்த மாரிச்செல்வம்(எ)வினித், தாவீத், வினோத்குமார், விக்ரம், ராஜேஷ் ஆகிய 5 பேரையும் கைது செய்து கரூர் அழைத்து வந்தனர். மேலும், நல்லுசாமியின் மகன் சக்திவேலை போடிநாயக்கனூர் சென்று கைது செய்து அழைத்து வந்தனர்.

தொடர்ந்து, கரூர் உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் DSP V.செல்வராஜ் அவர்கள் தலைமையில், பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் நா.முத்துக்குமார், உதவி ஆய்வாளர்கள் சையது, பாரதி மற்றும் காவலர்கள் எழிலரசன், முருகன், செல்லப்பாண்டி, பழனிச்சாமி மற்றும் போலீசார் ஆறு பேரையும், கரூர் விரைவு நீதிமன்ற நீதிபதி நசீமா பானு அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு திருச்சி மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றனர். சொத்து பிரச்சனைக்காக சொந்த தந்தையை கூலிப்படை வைத்து கொலை செய்த மகன் உள்ளிட்ட ஆறு பேர் 3, ஆண்டுகள் கழித்து கைது செய்யப்பட்ட சம்பவம் கரூர் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நிருபர்: N.நபிமுகமது, கரூர்.





**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**
**editorpoliceparvai@gmail.com**
**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**



## கோவாவில் நடைபெற்ற

# கைப்பந்து விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற தமிழ்நாடு வீராங்கனைகள்

2024 பிப்ரவரி மாதம் 8, முதல் 13,ஆம் தேதி வரையில் பட்டோர்ட்டா விளையாட்டு அரங்கம் கோவாவில் நடைபெற்ற 50, வயது 40, வயது பெண்களுக்கான கைப்பந்து விளையாட்டு பிரிவில் தமிழ்நாடு காவல்துறை மற்றும் தென்னக ரயில்வே துறையில் பணியாற்றும் வீரமங்கைகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி பல பரிசுகளை பெற்று தங்கள் துறைக்கும் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

50 வயதிற்கான விளையாட்டு பிரிவில் தமிழ்நாட்டு வீராங்கனைகள் அசாம் மாநில அணியினரோடு விளையாடி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர். 40 வயதிற்கான விளையாட்டு பிரிவில் தமிழ்நாட்டு வீராங்கனைகள் டெல்லி அணியினருடன் விளையாடி வெண்கல பதக்கத்தை வென்றுள்ளனர்.

தமிழ்நாடு காவல்துறை மற்றும் தென்னக ரயில்வே துறையை சேர்ந்த வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி தங்களது திறமைகளை வெளிப்படுத்தி பதக்கங்களை வென்று தமிழ்நாடு காவல்துறைக்கும் தென்னக ரயில்வே துறைக்கும் பெருமையை சேர்த்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




வீராங்கனைகள் சுகன்யா, கமலா, சாந்தி, இந்து, உஷா, கலா, மலர், அம்பிகா, சீபா, கோகிலா, நிம்மிஷா, குமாரி, நந்தினி, அருணா, அசீம், மகேஸ்வரி, எஃப்சி கோகிலா ஆகியோர் சிறப்பாக விளையாடி தமிழ்நாட்டுக்கும் தங்களது துறைக்கும் வெற்றி கோப்பைகளை கைப்பற்றி பெருமை சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமை நிருபர்: நா.ராகேஷ் சுப்பிரமணியன்.

◆ விழிப்புணர்வு பதிவு ◆





# தற்சார்பு வாழ்க்கை என்பது யாதெனில்?

## ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையா வழிமுறைகள்...

1. முதலில் நகரத்தில் இருந்து கிராமத்தை நோக்கி செல்லுங்கள் அல்லது உங்கள் சொந்த ஊர்களை நோக்கி செல்லுங்கள்.
2. வாழ்வதற்கும் தன்னிறைவு விவசாயம் செய்வதற்கும் போதுமான அளவு நிலங்களை வாங்குங்கள்.
3. சொந்தநிலத்தில் குறைந்தது 10 மரங்களையாவது நடுங்கள்.
4. விதைகளை எங்கும் வாங்காதிர்கள் நன்கு வளர்ந்த மரங்களின் விதைகளை சேகரித்து விதைத்து வளருங்கள்.
5. எளிய வாழ்கைக்கு போதுமான அளவு வீடுகளை கட்டி கொள்ளுங்கள்.
6. கிணறுகளை வெட்டுங்கள், (முடிந்தவரை ஆழ்துளை கிணறுகளை அமைக்காதீர்கள்) இல்லையென்றல் ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு சுழற்ச்சி முறையுடன் அமையுங்கள்.
7. வீட்டிற்கும், விவசாயத்திற்கும் தேவையான மின்சாரத்தை பெற சூரியஒளி அமைப்பை பயன்படுத்துங்கள்.
8. நிலத்தில் அன்றாட வாழ்கைக்கு தேவையான காய்கறி, கீரைவகை, சிறியவகை மரங்களான எலுமிச்சை, கொய்யா, மாதுளை, கறிவேப்பிலை வளருங்கள்.
9. விவசாயத்திற்கு தேவையான நாட்டு மாடு, ஆடு, கோழி போன்ற கால்நடைகளை வளருங்கள். இதன் கழிவுகளை விவசாயத்திற்கு பயன்படுத்துங்கள்.
10. பாரம்பரிய நெல்ரகங்கள் அல்லது தானியவகைகளை வளருங்கள்.
11. உங்களுக்கு தேவையானவற்றை போக மற்ற விளைபொருள்களை விற்று பொருள் ஈட்டிக் கொள்ளுங்கள்.
12. இதுபோன்று ஆர்வமுள்ள இளைஞர்களை உங்கள் ஊரிலே தேடி தர்சார்பு முறை அமைப்புகளையும், குழுக்களையும் மற்றும் Facebook, what's app குழுக்களையும் உருவாக்குங்கள்.
13. அந்த அமைப்புகள் மூலமாகவே விதைகளையும், விளைபொருள்களையும் பரிமாரி கொள்ளுங்கள்.
14. மற்றும் கிராம மற்றும் ஊர் பாரம்பரியங்களை பின்பற்றுங்கள்.
15. போதும் என்ற மனம் கொள்ளுங்கள், இயற்கையோடு இன்புற்று வாழுங்கள்.

*மேற்கொள்காட்டியவைகளை முதலில் நிச்சயம் செய்ய முயற்சிப்பேன் என தினமும் எண்ணம் கொள்ளுங்கள் உங்கள் எண்ணங்கள் உங்களை வழிநடத்தும். பாரம்பரியம் செழிக்க உதவுங்கள், அடுத்தவர்களுக்கும் கற்பியுங்கள்... வளமோடு வாழ... வயலும் வரப்பும்*

# நிலத்தின் அளவீடுகள்...

**நில அளவுகள் குறித்த தொடர்ச்சி...**

| | |
|---|---|
| 1 சென்ட் | – 40.47 சதுர மீட்டர் |
| 1 ஏக்கர் | – 43,560 சதுர அடி |
| 1 ஏக்கர் | – 40.47 ஏர்ஸ் |
| 1 ஹெக்டேர் | – 10,000 சதுர மீட்டர் |
| 1 சென்ட் | – 435.6 சதுர அடி |
| 1 ஏர்ஸ் | – 100 சதுர மீட்டர் |
| 1 குழி | – 144 சதுர அடி |
| 1 சென்ட் | – 3 குழி |
| 3 மா | – 1 ஏக்கர் |
| 3 குழி | – 435.6 சதுர அடி |
| 1 மா | – 100 குழி |
| 1 ஏக்கர் | – 18 கிரவுண்டு |
| 1 கிரவுண்டு | – 2,400 சதுர அடிகள் |

ஏக்கர்

| | |
|---|---|
| 1 ஏக்கர் | – 100 சென்ட் |
| 1 ஏக்கர் | – 0.404694 |

ஹெக்டேர்

| | |
|---|---|
| 1 ஏக்கர் | – 40.5 ஏர்ஸ் |
| 1 ஏக்கர் | – 43560 ச.அடி |
| 1 ஏக்கர் | – 4046 ச.மீ |

சென்ட்

| | |
|---|---|
| 1 சென்ட் | – 001 ஏக்கர் |
| 1 சென்ட் | – 0040 ஹெக்டேர் |
| 1 சென்ட் | – 0.405 ஏர்ஸ் |
| 1 சென்ட் | – 435.54 ச.அடி |
| 1 சென்ட் | – 40.46 ச.மீ |

ஹெக்டேர்

| | |
|---|---|
| 1 ஹெக்டேர் | – 2.47 ஏக்கர் |
| 1 ஹெக்டேர் | – 247 செண்ட் |
| 1 ஹெக்டேர் | – 100 ஏர்ஸ் |
| 1 ஹெக்டேர் | – 107637.8 ச.அடி |
| 1 ஹெக்டேர் | – 10,000 ச மீ |

ஏர்ஸ்

| | |
|---|---|
| 1 ஏர் | – 2.47 செண்ட் |
| 1 ஏர் | – 100 ச.மீ |
| 1 ஏர் | – 1076 ச.அடி |

| | |
|---|---|
| 100 குழி | = ஒரு மா |
| 20 மா | = ஒரு வேலி |
| 3.5 மா | = ஒரு ஏக்கர் |
| 6.17 ஏக்கர் | = ஒரு வேலி |

1 ஏக்கரின் நீளம் = 1 பர்லாங், 40 கம்பங்கள், 220 கெஜம்
1 ஏக்கரின் அகலம்= 1 சங்கிலி, 4 கம்பங்கள், 22 கெஜம்

நீட்டலளவை

| | |
|---|---|
| 10 கோண் | = 1 நுண்ணணு |
| 10 நுண்ணணு | = 1 அணு |
| 8 அணு | = 1 கதிர்த்துகள் |
| 8 கதிர்த்துகள் | = 1 துசும்பு |
| 8 துசும்பு | = 1 மயிர்நுனி |
| 8 மயிர்நுனி | = 1 நுண்மணல் |
| 8 நுண்மணல் | = 1 சிறு கடுகு |
| 8 சிறு கடுகு | = 1 எள் |
| 8 எள் | = 1 நெல் |
| 8 நெல் | = 1 விரல் |
| 12 விரல் | = 1 சாண் |
| 2 சாண் | = 1 முழம் |
| 4 முழம் | = 1 பாகம் |
| 6000 பாகம் | = 1 காதம் (1200 கஜம்) |
| 4 காதம் | = 1 யோசனை |

வழியளவை

| | |
|---|---|
| 8 தோரை(நெல்) | = 1 விரல் |
| 12 விரல் | = 1 சாண் |
| 2 சாண் | = 1 முழம் |
| 4 முழம் | = 1 பாகம் அல்லது தண்டம் |
| 2000 தண்டம் | = 1 குரோசம் 21/4மைல் |
| 4 குரோசம் | = 1 யோசனை |
| 71/2 நாழிகை வழி | = 1 காதம்(10மைல்) |

நிலவளவை குழிக்கணக்கு வருமாறு
16 சாண் = 1 கோல்
18 கோல் = 1 குழி
100 குழி = 1 மா
240 குழி = 1 பாடகம்

கன்வெர்ஷன்

| | |
|---|---|
| 1 சதுர அங்குலம் | = 6.4516 சதுர சென்டி மீட்டர் |
| 1 சதுர அடி | = 0.09290304 சதுர மீட்டர் |
| 1 சதுர கெஜம் | = 0.83612736 சதுர மீட்டர் |
| 1 சதுர மைல் | = 2.589988110336 சதுர கிலோ மீட்டர் |

பிற அலகுகள்1

| | |
|---|---|
| ஏர் | = 100 சதுர மீட்டர் |
| 1 ஹெக்டேர் | = 100 ஏர் = 10,000 சதுர மீட்டர் = 0.01 சதுர கிமீ |

தற்பொழுது ஏர் அதிகமாகப் பயன்பாட்டில் இல்லை என்றாலும் ஹெக்டேர் இன்றும் நிலங்களை அளக்கும்போது பயன்படுத்தப்படுகிறது.
நிலங்களை அளக்கும்போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் அலகு ஏக்கர் ஆகும்.
1 ஏக்கர் = 4,840 சதுர கெஜம் = 43,560 சதுர அடி = 4046.8564224 சதுர மீட்டர் 1 சதுர மைல் = 640 ஏக்கர் = 2.5899881103 சதுர கிலோ மீட்டர்



நில அளவை

| | |
|---|---|
| 100 ச.மீ | 1 ஏர்ஸ் |
| 100 ஏர்ஸ் | – 1 ஹெக்டேர் |
| 1 ச.மீ | – 10 .764 ச அடி |
| 2400 ச.அடி | – 1 மனை |
| 24 மனை | – 1 காணி |
| 1 காணி | – 1 .32 ஏக்கர் |
| 144 ச.அங்குலம் | – 1 சதுர அடி |
| 435.6 சதுர அடி | 1 செண்ட் |
| 1000 ச.லிங்க்ஸ் | 1 செண்ட் |
| 100 செண்ட் | 1 ஏக்கர் |

1 லட்சம் ச.லிங்க்ஸ்– 1 ஏக்கர்
2.47 ஏக்கர்– 1 ஹெக்டேர்
1 ஹெக்டேர்= 2.47 ஏக்கர்
1 ஏக்கர்= 4840 குழி

| | |
|---|---|
| 100 செண்ட் | = 4840 சதுர குழிகள் |
| 1 செண்ட் | = 48.4 சதுர குழிகள் |
| 1 ஏக்கர் | = 4067.23 சமீ |
| 1 ஏக்கர் | = 43560 சதுர அடி |

- S.செயத்அலி B.Sc., L.L.B.,

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**

HKI HAPPY KARUNAI ILLAM

# மகிழ்ச்சி கருணை இல்லம்

Regd No: 24/2018/BK4

ஆதரவற்றோர் முதியோர்கள் காப்பகம்



நீங்கள் வழங்கும் நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு உண்டு.

**மகிழ்ச்சி கருணை இல்லம்**

ஆதரவற்றோர் முதியோர்கள் காப்பகம்

முற்றிலும் ஆதரவற்ற முதியோர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்!

5/209D, வெள்ளை பிள்ளையார் கோவில் மேடு,
வெள்ளிரவளி (Po), குன்னத்தூர் (Via),
ஊத்துக்குளி (Tk), திருப்பூர் - 638 103.

**99767 12008, 96002 76503, 95663 79796, 77081 42008**

உங்களுடைய பிறந்த நாள், திருமண நாள், நினைவு நாள், கம்பெனி ஆண்டு விழா & பண்டிகை நாட்களில் ஒரு வேளை அல்லது ஒரு நாள் உணவு வழங்கி உதவி செய்ய வேண்டுகிறோம்.



| | |
|---|---|
| காலை உணவு | : 2,500/- |
| மதிய உணவு | : 4,000/- |
| இரவு உணவு | : 2,500/- |
| மொத்தம் ஒரு நாள் உணவு ரூ. | 9,000/- |

| | | |
|---|---|---|
| Bank Name | : | IDBI Bank |
| A/c. Name | : | HAPPY HOME CHARITABLE TRUST |
| A/c. No. | : | 1622102000022923 |
| IFSC Code | : | IBKL0001622 |
| Branch | : | Palladam Road, Tirupur |









நற்செயல் அனைத்தும் நம் வெற்றிகளுக்கு அடித்தளமாகும்.


Certificate of Registration
HAPPYHOME CHARITABLE TRUST
ISO 9001 : 2015

happykarunaiillam@gmail.com  www.happykarunaiillam.com  மகிழ்ச்சி கருணை இல்லம்
happykarunaiillam  @magilchi  https://youtube.com/channel/UC1TP-6dpJcU44Uem8gqDWBA

**உணவளித்தோர் உயிர் கொடுத்தோருக்கு சமம்!**

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of Publication,
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




TO

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542